வடக்கு-கிழக்கு புனரமைப்பு

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | ஆனி 1 | துல்ஹஜ்தா 9 | இதழ் 27

யாழ்ப்பாணம் | புதன்கிழமை | 14-06-1989

## நிவாரண உதவிகள் வாபஸாகலாம்

## அபிவிருத்திதிட்டங்கள் பற்றி முதலமைச்சர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்குப்பகுதிகளுக்கான புனரமைப்புக்களுக்கும், அபிவிருத்தித் திட்டங்களுக்கும் வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்கியுள்ள பெருவாரியான நிவாரண உதவிகளை ஆறுமாத காலத்திற்குள் பயன்படுத்தத் தவறினால் அந்த உதவிகளை வாபஸ் பெறப்போவதாக அந்தநிறுவனங்கள் அறிவித்திருப்பதாக வட-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.

யாழ். நகரில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்த முதலமைச்சர், இந்த நிதிகள் திரும்பிச்சென்றால் அதனால் பாதிக்கப்படப்போவது தமிழ்மக்கள்தான் என்று கவலை தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் முதலமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

''வடக்கு-கிழக்குப் பகுதியிலிருந்து இந்திய அமைதிப்படை வெளியேறும் பட்சத்தில்வடக்கு-கிழக்கில்இலங்கை இராணுவம் அமைதியை நிலைநாட்டுமென்று இலங்கைபாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார். ஆனால் தற்போது தென்பகுதியில் நடக்கும் வன்

(8ம் பக்கம் பார்க்க)

# தமிழர் வெட்டிக் கொலை!

# லொறிகளும் எரிப்பு

## அனுராதபுரத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரத்தில் நேற்று மூன்று தமிழர்கள் வெட்டிக்கொல்லப்பட்டதுடன் தமிழருக்குச் சொந்தமான லொறிகளும் எரிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து அநுராதபுரத்தில் வசிக்கும் தமிழர்கள் மத்தியில் அச்சம் நிலவுகிறது.

இந்தியப் பொருட்கள் மீதான பகிஷ்கரிப்பு தொடர்பாகவே இக் கொலைகள் இடம்பெற்றிருக்கலாமென்றும் கூறப்படுகிறது

மேற்படி சம்பவத்தைத் தொடர்ந்து பஸ்போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

## பிரேரணை நிறைவேறவில்லை

[திருகோணமலை]

''வடக்கு,கிழக்கு மாகாண சபையில் சுதந்திர தமிழ்

(8-ம் பக்கம் பார்க்க)

## வேலைக்கு சமூகமளிக்காத அரச ஊழியர் மீது நடவடிக்கை

### யாழ்.மாவட்டஅரசியல்இணைப்பாளர்எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

''அரசஅலுவலர்கள் வேலைக்குச் செல்லாமலிருப்பதை தமிழர்களின் நலனில் அக்கறையில்லாத ஸ்ரீ லங்கா அரசு பார்த்துக்கொண்டிருக்கலாம். ஆனால் மக்கள் நலனில் அக்கறையுள்ள மாகாண அரசு இது பற்றி நடவடிக்கைகள் எடுக்காது வாளாவிருக்கமுடியாது''.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல் இணைப்பாளர் திரு. ஆ. முருகநேசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

(8-ம் பக்கம் பார்க்க)

## ஊர்காவல்படையினர் பலி!

(கொழும்பு)

பண்டாரவளை பகுதியில் நேற்று ஊர்காவல் படையினர் ஆறுபேர் ஜே. வி. பி. யினரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று அமரர் எஸ். ஆர். நினைவுதினம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் சைவ வித்தியாவிருத்திச் சங். த் தலைவர் அமரர் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயத்தின் முத்பத்தோராவது நினைவு தினமான இன்று புதன்கிழமை அன்னாரின் உருவப்படத் திறப்பு விழாவும், நினைவுமலர் வெளியீடும் திருநெல்வேலியில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(நினைவு மலர் உள்ளே)

## இந்தியத் தூதரக அதிகாரிகள் ஊழியர்க்கு ஹோட்டலில் பாதுகாப்பு

### ஜனாதிபதி-தூதுவர் சந்திப்பு

(கொழும்பு)

இந்தியத் தூதரக அதிகாரிகள், ஊழியர்களின் குடும்பத்தினர் அனைவரும் கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றுக்கு நேற்று அவசர அவசரமாக கொண்டு செல்லப்பட்டனர்.

இந்தியத் தூதுவர் திரு. மல்ஹோத்திராவும் அவரது குடும்பத்தினரும் மட்டுமே தூதரகத்தில் தங்கியுள்ளனர். தூதரக சுற்றுடலிலும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையிலுள்ள இந்தியர்கள் அனைவரும் தாயகம் செல்லவேண்டும் என்றும் இந்தியப் பொருட்களை பகிஷ்கரிக்குமாறும் ஜே. வி. பி. யினர் விடுத்துள்ள காலக்கெடு இன்றுடன் முடிவடைவதை

(8-ம் பக்கம் பார்க்க)

## வர்த்தகர் இருவர் சுட்டுக் கொலை

(வடமராட்சி)

நெல்லியடி திருமகள் புத்தகசாலை உரிமையாளர் திரு. சிவசோதி [சோதி] என்பவரும் சரஸ்வதி ஸ்ரோர்ஸ் உரிமையாளர் திரு. மணியம் என்பவரும் நேற்றுக்காலை இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## பாடசாலை அதிபர்களுக்கு கல்விப் பணிப்பாளர் பணிப்புரை

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்குப்பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை வழமை போல நடத்தும்படி மேற்படி பிரதேசங்களிலுள்ள

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக மாணவர் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

''மாணவர்கள் மீதான கைதுசெய்தல் நடவடிக்கைகள், கொலைகள், துன்புறுத்தல் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. இதற்கென மாணவர்களின் போராட்ட உணர்வு நியாயமானது. உரிய வகையில் முன்னெடுக்கப்படவேண்டியது. இவ்வகையில் பாடசாலை மாணவர்களின் போராட்டத்திற்கு யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தனது

(8-ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூடு: இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டையில்நேற்று ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காக்கிப் படுகாயமடைந்தார்.

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த தவராசலிங்கம் நவசீலன் (வயது 19) என்பவரே இவ்வாறு சூடுபட்டவராவார்.

இவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவராகும்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கு)

## கொழும்பில் எச்சரிக்கை சுவரொட்டிகள்!

(கொழும்பு)

தென்னிலங்கையில் இன்று தொடக்கம் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு அழைப்பு விடுத்திருப்பதையடுத்து பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்து இந்திய அமைதிப் படையைத் திருப்பி அனுப்ப வேண்டும் எனவும், இந்தியப் பொருள்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் எனவும் ஜே. வி. பி. இயக்கத்தினர் கோரிக்கை விடுத்து இந்த ஹர்த்தாலை ஏற்பாடுசெய்திருப்பதாகத்தெரியவருகிறது.

அரசாங்கம் பாதுகாப்புப் படையினரையும் பொலிசாரையும் உஷார் நிலையில் வைத்

(8-ம் பக்கம் பார்க்க)

## வ. பி. போ. சபை தூர இடங்களுக்கான பஸ்சேவை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் நடத்தப்பட்டு வந்த தூர இடங்களுக்கான பஸ்சேவைகள் யாவும் நேற்று முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிற்கு அப்பால் வடபிராந்திய போக்குவரத்துச் சேவை நேற்று நடைபெறவில்லை,

மறு அறிவித்தல்வரை இந்தச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இளைஞரின் சடலம் ஆஸ்பத்திரியில் ஒப்படைப்பு

[யாழ்ப்பாணம்]

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலம் ஒன்று தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் நடந்ததாக கூறப்படும் இச்சம்பவத்தில் மரணமுடைந்தவர் கொல்லங்கலட்டியைச்சேர்ந்த சின்னத்துரை சிவகடாட்சம் (வயது 22) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

## வவுனியா பகுதியில் நால்வர் சுட்டுக் கொலை!

### விபத்தில் ஒருவர் பலி

[வவுனியா நிருபர்]

வவுனியா பகுதியில் இடம்பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களில் வயோதிபர் மூவர் உட்பட நால்வர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

வவுனியா உக்கிளாங்குளம் என்னுமிடத்தில் நீக்கிலாஸ் (வயது 48), அரியம் (வயது 58) ஆகிய இருவரும் கூமாங்குளம் பகுதியில் செல்வச்சந்திரன் (வயது 20) என்பவரும், ஓமந்தையில் சிவன் (வயது 50) என்பவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இறக்குமதியாக விருக்கும் (Holland, OR. U. K) விதை உருளைக் கிழங்கு தேவைப்படுவோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-2931)

பதனிடப்பட்ட பம்பாய் வெங்காய விதை (Country of Origin Holland) விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். கிளை; மல்லிகா ஸ்டோர், மாங்குளம். சி-2947

புதிய தமிழ் மொழிப் பயிற்சி ஆண்டு 5 புலமைப் பரிசில் விசேட சித்திக்கு வழிகாட்டி, வெளியீடு: கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (சி. 2950)

உள்ளூரில் சுத்தமாக தயாரிக்கப்பட்ட குரக்கன்மா, கையால்குத்தி வறுத்த சிவப்பு அரிசிமா, கடலைமா, கையால் குத்திவறுத்த வெள்ளை அரிசிமா, உழுந்துமா ஆகியவை எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். M. G. M. 777, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 208, 1-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி. 2926)

### பரீட்சை

SLAS பரீட்சைக்குரிய நுண்ணறிவு (பொதுவுளச் சார்பு). கிரகித்தல் ஆகிய புதிய நூல்கள் வெளிவந்துவிட்டன. விடய ஆய்வு விரைவில் வெளிவரும். க. குணராசா, SLAS ஸ்ரீலங்கா புத்தகசாலை/பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். சி-2933

### நாவல்

மீராவின் பாலைவனப் பயணிகள் (கே. ஆர். டேவிட்) துடிதுடிப்புடன் செல்லும் இந் நாவலைப் படித்துமுடித்துவிட்டுத்தான் கீழே வைக்கமுடியும், மலிவுப் பதிப்பு 10/- ராஜன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-2940]

### மணப்பந்தல்

யாழ் உயர் இந்து வேளாள குல பொறியியலாளர் மணமகனுக்கு பெற்றோர் அழகிய படித்த விரிவுரையாளர், கணக்காளர், அல்லது பொறியியலாளர் மணப்பெண்ணை தேடுகிறார்கள். மணப்பெண்ணின் வயது 38க்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். சாதகம், சீதனம் மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல:- C. 2939 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். (சி. 2939)

## நிர்வாகிகள்

[சுண்டுக்குளி]

ஆனைக்கோட்டை முள்ளி கிராமத்தின் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க ஆரம்பக் கூட்டம் அண்மையில் திரு. கே.கே.சந்திரன் தலைமையில் மேற்படி கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: கே.கே. சந்திரன், உப தலைவர்: கே. கோபால், செயலாளர்: ரி. சிறீகாந்தன், உப செயலாளர்: நெவில் தனராஜ், பொருளாளர்: என். உதயகுமார், உபசெயலாளர்: ரேக்குருசா. இத்துடன் 11 பேர் கொண்ட ஆலோசனைக் குழுவினரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

# காப்புறுதி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்கப்படும்

(அச்சுவேலி)

புத்தூர் கமநலசேவை நிலையப் பகுதியில் நெல் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு நெற்பயிர்ச் செய்கை காப்புறுதித் திட்டத்தின்கீழ் நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

1988-ம் ஆண்டு காலபோக நெல் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளில் காப்புறுதித் திட்டத்தின்கீழ் காப்புறுதி செய்த விவசாயிகளுக்கு காப்புறுதி நிவாரண ஈட்டு தொகையாக நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

நெற் பயிர்ச்செய்கை பாதிப்படைந்ததால் அதற்குரிய நிவாரண நஷ்டஈடு வழங்குவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புத்தூர் கமநல சேவை நிலையப் பகுதியில் 63 விவசாயிகள் 1988-ம் ஆண்டு நெற்பயிருக்கு காப்புறுதி செய்துள்ளனர்.

## பெண் சிற்றூழியர் பற்றாக்குறை

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் பெண் சிற்றூழியர்களுக்குப் பற்றாக்குறை நிலவிவருகிறது.

அண்மையில் ஏற்பட்ட 2 வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படவில்லை என்று தெரியவருகிறது.

## இளைஞர் சுட்டுக் கொலை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு - பெரியவிளான் வீதியில் இனம் தெரியாத சிலரினால் வாலிபர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் கள்ளுத்தவறணைக்கு அண்மையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

## இராசி பலன்

**14-06-1989**

தசமி காலை 6-34 வரை, சித்திரை இரவு 9-27 வரை சுபகருமங்கள் செய்ய நன்று.

மேஷம்: தொழில் மேன்மை உற்சாகம், பணவரவு, குடும்ப சுகம், பயணங்களால் அநுகூலம், வாக்குவன்மை.

இடபம்: எதிர்பாராத சந்திப்பு, மனநிறைவு, மங்கள காரியம், மனையாள்பேறு, கடன்வசூல், பாராட்டு.

மிதுனம்: காதல் தோல்வி, விசனமடைதல், பொருள் செலவு, இனசனப்பகை, ஏமாற்றம், கவலை.

கடகம்: வைத்திய செலவு, குடும்பப்பிரிவு, சகோதரர் உறவு, தொழில் நஷ்டம், அலைச்சல்.

சிங்கம்: முயற்சி வெற்றி, திருமணப் பேச்சு, மனமாற்றம், பெரியோர் ஆசி, மகிழ்ச்சி.

கன்னி: கடும் கோபம், அந்தியவாசம், செய்நன்றி மறத்தல், ஆசாரக்குறைவு, மனச்சுமை.

துலாம்: குடும்ப மகிழ்ச்சி, மாமன்வழி உதவி, பயணங்களால் காரிய அனுகூலம், தொழில் வெற்றி.

விருச்சிகம்: தடுமாற்றம், வீண்பகை, எதிரிகள் தொல்லை குடும்பத்தில் கவலை, தொழில் லாபக்குறைவு, கடன்.

தனுசு: வாக்கு வசீகரம், நோய் தணியும், குடும்பத்தில் ஒற்றுமை, மக்களால் நன்மை, தானதர்மம்.

மகரம்: புதியஸ்தானம், பழைய நினைவுகள் துளிர்விடும், குடும்பத்தில் சந்தோஷம், பெண்கள் நேசம், கற்பனை.

கும்பம்: சென்றவிடத்தில் பகை, வாக்குவாதம், காரிய தடை, பயணங்களால் செலவு சோம்பல்.

மீனம்: மனதில் வெறுப்பு, அதிக யோசனை, பிரச்சினைகள் உருவாகும், அதிகாரிகள் சீற்றம்.

## நியாயவிலையில் விதைகள்

(அச்சுவேலி)

விவசாயிகளுக்கு தேவையான இறக்குமதி செய்யப்பட்ட விதை வகைகள் கமநல் சேவை நிலையங்களில் நியாமான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான கரட், பீற்றூட், போஞ்சி அவரை இனங்கள் மற்றும் பயிர்ச் செய்கை தொடர்பான விதைகள் இறக்குமதி செயயப்பட்டு கமநல சேவை நிலையங்களில் வைத்துநியாயமானவிலைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

தமக்கு தேவையான பயிர்களின் விதைகளை தத்தமது பகுதியிலுள்ள கமநலசேவை நிலையங்களில் விவசாயிகள் வாங்கலாமென கமநல சேவைத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## சட்டவிரோத மின்பாவனை

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு சில்லாலை பகுதிகளில் இரவு வேளையில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளது. இதனால் இப்பகுதியில் அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றது. பல வீடுகளில் மாலை ஆறுமணிக்கு இந்த சட்ட விரோத மினபாவனை ஆரம்பமாகி அதிகாலைவரை நீடித்து வருகின்றது. இது குறித்து பண்டத்தரிப்பு உப அலுவலக மின்சாரப்பகுதியினர் எச்சரிக்கை விடுத்தும் கவனிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

## சிரமதானம்

(பண்டத்தரிப்பு)

வழுக்கையாறுஇந்து மயான அபிவிருத்திச்சபை மேற்கொண்ட முயற்சியினால் மயானத்தை சிரமதான மூலம் துப்பரவு செய்யும் பணி எதிர்வரும் 18-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

காங்கேசன்துறை மாவட்ட சாரணர்கள் இந்த சிரமதானத்தில் கலந்து கொண்டு மயானத்தை துப்பரவு செய்வார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

## ஓவியக்கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ஆதரவில் அ. சதீஷின் சிற்ப ஓவியக்கண்காட்சியொன்று இம்மாதம் 30-ம் திகதி தொடக்கம் ஜூலை 2-ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் பொது அறையில் நடைபெறும் இக்கண்காட்சி தினமும் காலை 9-00 மணியிலிருந்து மாலை 5-00 மணிவரை நடைபெறும்.

## சீரற்ற பஸ் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். பஸ் நிலையத்திலிருந்து தாவடி - மனிப்பாய்- உடுவில் ஆகிய இடங்களுக்கு ஊடாக மருதனுமடம் வரை நடாத்தப்படும் 771-ம் இலக்க வடபிராந்திய போக்குவரத்துச்சபை, பஸ் சேவை நீண்டகாலமாகச் சீரற்றநிலையிலிருப்பதால் பிரயாணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

மருதனுமடம் இராமநாதன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி போன்ற பிரபல கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவிகளும் மற்றும் பாடசாலை மாணவர்களும் ஏனைய பிரயாணிகளும் இந்த சீரற்ற பஸ் சேவையினால் மிகவும் கஷ்டமடைவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளையில். இப்பாதை வழியாகவும் சிறியரக தனியார் மினிவான்கள் சேவையிலீடுபடுகின்ற போதிலும் பிரயாணிகளிடமிருந்து போக்குவரத்துச் சபை பஸ்களைவிட அதிக கட்டணம் வசூலிக்கப்பட்டுவருவதாகவும் இந்தச் சிறிய ரக மினி வான்களில் அளவுக்கதிகமாகப் பிரயாணிகளை ஏற்றுவதினால் அவர்கள் மிகுந்த கஷ்டத்தை அனுபவித்துவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவில் டிப்போ அதிகாரிகள் இந்த யாழ் - மருதனுமடம் பஸ் சேவையைச் சீராக நடாத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (பண்.நிரு.)

## கலையரங்கு திறப்புவிழா

கைதடிச் சந்தியில், கைதடி தெற்கு சனசமூக நிலையத்தால் அமைக்கப்பட்ட 'கலையரங்கு' இன்று திறந்துவைக்கப்பட உள்ளது.

பல இலட்சக்கணக்கான ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் 'கலையரங்கு' கைதடி மக்களின் கலை வளர்ச்சிக்கு களம் அமைத்துக்கொடுக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

கலாசாரத்துறையில் முன்னணியில் திகழும் கைதடி தெற்கு சனசமூகநிலையத்தினரின் இந்த முயற்சியைப் பல பொது அமைப்புகளும் பாராட்டியுள்ளன.

நிலையத் தலைவர் திரு. க. சிவஞானம் தலைமையில் நடைபெறும் இன்றைய நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகச் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு.பூ.சுந்தரம்பிள்ளை கலந்துகொண்டு கலையரங்கு கட்டடத்தைத் திறந்துவைப்பார்.

நிர்வாகத் திறனும், கலை ஆர்வமும் மிக்கவருமான திரு. பொ. செல்வராசாவை செயலாளராகக் கொண்டியங்கும் இச்சனசமூக நிலையம் 50க்கும் அதிகமான நாடகங்களை இதுவரையும் தயாரித்துஅளித்துள்ளது. இத்தகைய சிறப்பு வாய்ந்த சனசமூக நிலையத்திற்கென ஒரு சொந்தமான அரங்கு அமைக்கப்பட்டது தேவையறிந்த செயலாகும்.

கைதடியிலுள்ள பல அமைப்புக்கள் தமது நிகழ்ச்சிகளை நடத்துவதற்குப் பொதுவான அரங்கு இல்லாமல் இதுவரை காலமும் பாடசாலை மண்டபங்களில் நடத்திவந்தார்கள். இன்று முதல் இந்த அரங்கு எந்த நிகழ்ச்சிக்கும் பயன்படுத்தக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

'அரங்கு' அமைந்துள்ள நிலம் ஏற்கனவே சேறும்சகதியுமாகவே இருந்தது. நிலைய உறுப்பினர்களின் அயரா முயற்சியினால் அதன் ஒரு பகுதி சிரமைக்கப்பட்டது. மேலும் சேறும் சகதியுமாக உள்ள ஒருபகுதி நிலத்தை நிரப்புவதற்கு கைதடியில் உள்ள செல்வந்தர்களும், பிரதேச சபையினரும் முன்வந்து உதவவேண்டும். — துரை

## செய்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

முறைசாராக்கல்விப்பிரிவில் கிளிநொச்சி மாவட்டத்தில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான செய்முறைப்பரீட்சை யாழ், கல்வித்திணைக்கள கல்வி அதிகாரி (தொழில் நுட்பம்) திரு. க. சுப்பிரமணியத்தால் அண்மையில் நடத்தப்பட்டது.

கிளிநொச்சி மகாவித்தியாலயம் இந்து மகாவித்தியாலயம், பரந்தன் இந்து மகாவித்தியாலயம் ஆகியவற்றில் நடத்தப்பட்ட இந்தப் பரீட்சையில் நூறு மாணவர்கள் பங்குபற்றினார்கள்.

## புதிய சங்கம்

(மன்னார்)

மன்னாரில் வலது குறைந்தவர்களின் ஐக்கியநாடுகளின் தசாப்தம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் தலைமைச் சங்கம் கொழும்பில் உள்ளது.

எல்லா மாவட்டங்களிலும் இச்சங்கம் கிளைகளை நிறுவி, இலங்கை வாழ் வலதுகுறைந்த மக்களின் புனர்நிர்மாணத்துக்கு உண்மையான ஒரு நடைமுறைத் திட்டத்தை அமைப்பதற்காகப் பல முயற்சிகள் எடுக்கின்றது. மன்னாரிலும் உயர் மாவட்ட அதிகாரிகள் தொண்டர் ஸ்தாபனங்கள் ஊடாக வலது குறைந்தவர்களுக்கு உதவிபுரிய இச்சங்கம் முன்வந்துள்ளது.

## மீனவர்களுக்கு வெளிச்ச வீடுகள்

(மன்னார்)

கடலுக்குச் செல்லும் மீனவர்களின் நலன்கருதி மன்னாரில் மீனவ கிராமங்களான வங்காலை, அரிப்பு, முள்ளிக்குளம், தாழ்வுபாடு, விடத்தல்தீவு, பேசாலை தலைமன்னார் போன்ற இடங்களில் 1990-1991ம் ஆண்டு மாவட்டச் செயற்திட்டத்தில் மீனவர்களுக்கு வெளிச்சவீடுகளைக் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடுசெய்துள்ளது. இதனால் இரவில் செல்லும் மீனவர்கள் அதிகாலையில் கரைக்குவரத் துணையாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

## சிறுப்பிட்டி விவசாயக் கிராமம்

(அச்சுவேலி)

சிறுப்பிட்டி கிராலிக்குளம் பகுதி 'மாதிரிக்கண்ட அபிவிருத்தித் திட்டத்தின்' கீழ் விவ விவசாயக் கிராமமாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

ஒவ்வொரு கமநலசேவை நிலையப்பகுதியிலும் தெரிந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு கிராமம் மாதிரிக்கண்ட அபிவிருத்தி திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

இந்த அடிப்படையில் புத்தூர் கமநல சேவை நிலையத்தின்கீழ் சிறுப்பிட்டி கிராலிக்குளம் மாதிரிக்கண்ட அபிவிருத்தி திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

## நிர்வாகிகள்

(நாவற்குழி)

தச்சந்தோப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. எஸ். பிறேம்குமார் செயலாளர் திரு. க. சந்திரசேகரம், பொருளாளர் திரு. அ. காசிலிங்கம் உபதலைவர் திரு. க. அருளானந்தம், உப செயலாளர் திரு. பொ. நந்தகுமார் ஆகியோரும் நிர்வாகசபை உறுப்பினர்களாக 7 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

உறுதியான கற்பாறையானது காற்றினுல் அசைவதில்லை. அதேபோன்று அறிவாளிகள் புகழ் மொழிகளினுலோ அவதூறுகளினுலோ அசைந்துவிடுவதில்லை.

- தர்மபதம்

# மதமாற்றத்தை தடுக்க பெரும் இயக்கம் நடத்தவேண்டும்

## தங்கம்மா அப்பாக்குட்டி கருத்து

(யாழ்ப்பாணம்)

''தற்போது பரவும் மதமாற்றத்தைத் தடுக்க பெரும் இயக்கம் ஒன்றை நடத்த வேண்டும். தெருவெல்லாம் திருமுறையும் வேத ஒலியும் ஒலிக்கவேண்டும்.''

இவ்வாறுவலி-கிழக்கு திருத்தலப் பாதயாத்திரைப் பூர்த்தி விழாவை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் தேவஸ்தான தலைவி பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவித்தார்.

விழாவிற்கு முன்னதாக கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் கோவிலில்இருந்து மேளவாத்தியம் முழங்கத் திருமுறை ஒலிக்க சிவனடியார்கள் புடைசூழ ஆத்மஜோதி நா. முத்தையாகோப்பாய் பாலனை அம்மன் கோவிலுக்கு அழைத்து வரப்பட்ட சமயம் வழி நெடுகிலும் பொதுமக்கள் பூரண கும்பம்வைத்து மலர் மாலை சூட்டிப் பாதபூஜை செய்து வரவேற்றனர்.

ஊர்வலத்தை அடுத்து கோப்பாய் கண்ணகை அம்மன் கோவிலில் விசேடபூஜை வழிபாடுகளுடன் நடைபெற்ற கூட்டத்திற்கு கோப்பாய உதவி அரசாங்க அதிபர் பணிமனை பிரதம எழுதுவினைஞர் திரு. எஸ்.ஆர். சரவணமுத்து தலைமைவகித்தார். தொடர்ந்து பேசிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கூறியதாவது:

''நான் இன்று இவ்விழாவுக்கு வரும்போது வேற்றுமத இளைஞர்கள் மதப்பிரசாரம் செய்யச் செல்வதைக்கண்டேன். சைவ இளைஞர்களும் சைவத் திருமுறைகளோடு வீடுவீடாகச் சென்று மக்கள் மத்தியில் சைவ உணர்வை ஏற்படுத்த வேண்டும் சம்பந்தர் பாடிய ''தோடுடைய செவியன்'' முதலாக சேக்கிழார் பாடிய ''என்றும் இன்பம் பெருகும்'' ஈருகவுள்ள பாடல்கள் பதினெண்ணுயிரத்திற்கும் அதிகம். இவற்றை மக்கள் மத்தியில் பாடி மக்களை ஆத்மீக நெறியில் துணிவாக வாழவைக்கவேண்டும்.

ஆத்மஜோதிநா.முத்தையா தலைமையில் நடைபெறும் பாதயாத்திரைபோன்று நாட்டின் பலபாகங்களிலும் நடைபெறவேண்டும்அனைத்து இடங்களிலும் திருநீறும், சிவப் பொலிவும், திருமுறைப் பெருமையும் போற்றப்படவேண்டும்.

கோப்பாய் ஆசிரியகலாசாலை விரிவுரையாளர் திருமதி மங்கயர்கரசி திருச்சிற்றம்பலம் பேசுகையில் நல்லாரைப் பேணவும் நல்லாரோடு வாழவும் பழகவும் திருத்தலயாத்திரை மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பாக அமைகிறது வலி-கிழக்கு மக்கள் திருதலயாத்திரையில் காட்டிய ஆர்வம் சைவ எழுச்சிக்கு வித்திட்டுள்ளது. துன்பம் மலிந்த இவ்வேளையில் ஆத்மஜோதி முத்தையா நடாத்தும் பாதயாத்திரை மக்களுக்கு மன அமைதியைக் கொடுப்பதோடு, மன உறுதியையும்கொடுக்கிறது.'' என்றூர்.

### பாதயாத்திரை மனஉறுதியைக் கொடுக்கும்

திருமதி வசந்தா வைத்தியநாதன் பேசுகையில், உடல் உறுதியுடன் உள்ளமும் உறுதிபெற வேண்டும். இதற்காககவே உடல் உறுதி தளர்ந்துள்ள திரு. முத்தையா பாதயாத்திரையை மேற்கொள்கிருர் சமயாச்சாரியார்கள் இருந்த இடத்திலே இருந்து கொண்டு சைவம் வளர்க்கவில்லை.பல சிரமத்திற்கு மத்தியில் நடந்துசென்றே சைவ எழுச்சி இயக்கம் நடத்தினர். திருமுறைகளைப் பக்தியோடு பாடினுல் அன்று தேவாரம் பாடியபோது நிகழ்ந்த அற்புதங்கள் மீளவும் நடைபெறும். என்பதில்சந்தேகமில்லை. இந்த யாத்திரை பக்திபாத்திரை மட்டுமன்று உள்ள உறுதியோடு நடக்கும் வீர யாத்திரையும் கூட என்றூர்.

### மதமாற்றத்தை தடுக்கவேண்டும்

ஏழாலை சைவ சமய அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சி. சக்திகிரீவன் பேசுகையில் இன்றைய நெருக்கடி மிக்க சூழ்நிலையில் சைவாலயங்களுககு அருகில் அனுதை இல்லங்கள் அமைத்து சைவமக்களைப் பேணுவதன் மூலம் மதமாற்றத்தை தடுக்கமுடியும் இப்பணியில் முன்னின்று உழைக்கும் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பாராட்டுக்குரியவர் என்றூர்.

விழாவில் ஆத்மஜோதி முத்தையாவுக்கு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்களால் பொன்னுடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

# நமது நோக்கு

## பாலர் பூங்கா பரவுமா எங்கும்?

“கல்வித் திட்டத்தில் பாலர் கல்வி முறை மிகவும் முக்கியமான தொன்ருகும். பாடசாலைக்கு முதன் முதலிற் செல்லும் குழந்தையிடம் காணும் பய உணர்வும், பெற்ருேரைப் பிரியும் ஏக்கமும் பாலர் கல்வி முறையால் நீங்குகின்றன'' என்று கூறியிருக்கிருர் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர். பாலர் பாடசாலை ஒன்றின் விளையாட்டுப் போட்டிக்குப் பிரதம விருந்தினராகப் பங்குபற்றிப் பாலர் கல்வியை உற்சாகப் படுத்தியுள்ளார்.

வெளிநாடுகளிலே பாலர் கல்வியின் முக்கியத்துவம் அறிந்து, ஆராய்ச்சிகள் மேற்கொண்டு, குழந்தைகளின் வயதுக்கேற்ற விளையாட்டுகள், பயிற்சிகள், இசைக்கோலங்கள் ஆகியவற்றை ஊக்குவித்துவருகிருர்கள்.

அரசாங்கங்களே, நாட்டின் கல்வித் திட்டத்தில் பாலர் கல்விக்கும் முக்கியத்துவம் கொடுத்து, கல்விச் செலவில் ஒரு பகுதியை அதற்கென ஒதுக்குகிருர்கள்.

எமது நாட்டிலும் கல்வி வெள்ளை அறிக்கையில் அது பற்றிக் குறிப்பிடப்பட்டது. உள்ளூராட்சி மன்றங்களே இவற்றை நடத்தட்டும் என்று பொறுப்பை அவர்கள் தலையில் கட்டி விட்டார்கள்.

உள்ளூராட்சி மன்றங்களோ, உருமாறி, கோலம் மாறி, இணைக்கப்பட்டு தம்மைத்தாமே நிர்வகிப்பதில் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றன. இந்த நிலையில், அவை பாலர் கல்விக்குத் தகுந்த ஊக்கம் அளிப்பார்களா என்பது கேள்விக்குறி. இந்தவேளையில் சென்ற சில வருடங்களாக, சில தனியார் ஸ்தாபனங்கள் பாலர் கல்வியில் அக்கறைகாட்டி, நல்லபல முயற்சிகள் எடுத்துவருவதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

தெருவுக்குத்தெரு, வீட்டு விருந்தைகளில் பாலர் வயதுக்குப் பொருந்தாத தளபாடங்களுடனும் பயிற்சி பெருத ஆசிரியைகளினுல் பாலர் சிந்தனை ஆற்றலுக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் திணிக்கப்படுவதை யார்தான் அறியமாட்டார்கள் இத்தகைய பாடசாலைகளினுல் பாலருடைய கல்வி ஆர்வம் சில வேளைகளில், நசுக்கப்படுமோ என நாம் நம்புவதற்கு நியாயமுண்டு.

எனவேதான், பயிற்சி பெற்ற ஆசிரியர்களினுல் பாலருக்கேற்ற சூழலில் பாலர்கல்வி நடைபெற வேண்டுமென நாம் விரும்புகிருேம். பாலர் பாடசாலை என்ற பெயரை நாம் விரும்பாது பாலர்பூங்கா எனப் பெயரிடுவதைப் பெரிதும் விரும்புகிருேம்,

மூன்ரும் உலகநாடுகளிலேயே படிப்படியாகப் பின் தள்ளப்படும். எமது நாட்டிலே ஒரும் பொருட் செலவிற் பாலர் கல்வியை அமுல் நடாத்துவது கடினம் எனவே மேலை நாடுகளிலே படித்தவற்றை எல்லாம், பார்த்தவற்றை எல்லாம், கண்ட பாவனையிற் கொண்டை முடிவதுபோல இங்கும் நடைமுறைப் படுத்த முயலக்கூடாது:

உபகரணங்கள், உடுப்பு வகைகள், எழுதுகருவிகள் போன்றவற்றிற்கு அதிக செலவைத் தூண்டும்வகையிற் பாலர் கல்வி அமைந்தால் அது செல்வந்தர் வீட்டுக்கு மாத்திரமே அமைந்த திட்டமாகி விடுமோ என அஞ்சுகிருேம்.

எளிமை, சிக்கனம்; நாட்டுச் சூழல் போன்ற காரணிகளையும் கவனத்தில் எடுப்பது அவசியம். வெளிநாடுகளிற் பயிற்சி பெற்றவர்களும், கல்வித்திணைக்கள அதிகாரிகளும் இணைந்து வகுப்புகள், கருத்தரங்கு வழிவிடப் பயிற்சிகள் நடாத்தி வருகிருர்கள்.

பாலர் ஆசிரியர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள். சிக்கனமாக உபகரணங்கள் தயாரித்தல், நாட்டார் இசைக்கருவிகள், நாடக உத்திகள், சுகாதாரப்பழக்க வழக்கங்கள் போன்ற பல பிரச்சினைகளுக்குக் கல்வித் திணைக்களத்தினர் வழி காட்ட வேண்டுமென்று விரும்புகின்ருேம்.

அங்கும் இங்குமாகத் தனித்தனிப் பயிற்சிகளைக் கண்காணித்து, ஒருங்கிணைத்து தரங்குன்ருவண்ணம் பாலர்கல்வியைவளர்க்கக் கல்வித்திணைக்கள அதிகாரிகள் முன்வரவேண்டும்.

# அரச அதிபர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர்விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்தபணம் பயன்படுத்தப் படாததால் 40 லட்சம் திரும்பியது'' என்ற தலைப்பில் கடந்த 12ம் திகதி 'ஈழநாடு' இதழில் வெளிவந்த செய்தி தொடர்பாக யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டும் யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திரு.எஸ். டிவகலாலாவும் பின்வரும் விளக்கத்தை எமக்கு அனுப்பியுள்ளனர்.

முன்னுள் யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளரும் தற்போதைய யாழ்-கிளிநொச்சி அரசாங்க அதிபருமான திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்ததாவது:

''யாழ். மாவட்ட உள்ளூராட்சியின் அபிவிருத்தி வேலைகளுக்கென ஒவ்வொரு வருடமும் அரசாங்கம் இருபது லட்சம் ரூபாவை ஒதுக்குவது வழக்கம்.ஆனுல்1987ம்ஆண்டுக்கும், 1988ம் ஆண்டுக்கும் உரிய நாற்பது லட்சம் ரூபாவையும் அரசாங்கம் வழங்கவில்லை. இப்பணத்தை அனுப்பிவைக்கும்படி பலமுறை கேட்டும் அரசு அனுப்பவில்லை. அந்த இரு வருடங்களுக்கும் உரிய நாற்பது லட்சம் ரூபாவும் யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டு பயன்படுத்தப்படாமல் திரும்பியது என்று கூறப்படுவது சரியல்ல.''

''யாழ். மாட்டத்திலுள்ள ஒரு பாராளுமன்ற உறுப்பினருக்கு இரண்டு லட்சம் ரூபா வீதம் இருபது லட்சம் ரூபா யாழ். மாவட்ட உள்ளூராட்சி அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகிறது.

''1987ம் ஆண்டும் 1988ம் ஆண்டும் வழமையான நிதி ஒதுக்கீடு வந்து சேரும் என்ற நம்பிக்கையில் கட்டிட வேலைகள் உட்படப்பல வேலைகளுக்கு ஒப்பந்தங்களைக்கூட செய்திருந்தோம். ஆனுல் பணம் வராததினுல் ஒப்பந்தங்களை இரத்துச்செய்தோம். நான் உள்ளூராட்சி ஆணையாளராககடமை புரிந்த காலங்களில் அரசாங்கத்தினுல் ஒதுக்கப்படும் பணத்தை முழுமையாகப் பயன்படுத்தி வந்துள்ளேன்.''

திரு. டிவகலாலா கூறியதாவது:

''கடந்த 11ம் திகதி வேம்

(7-ம்பக்கம் பார்க்க)

### அன்னை அடியவர் யாவர்க்கும் அருள்வாள்

அன்னை அடியவர் யாவரும் வாரீர்
அம்பாள் அருட்திரு ஆலயம் சேரீர்
என்ன குறையவை எடுத்துடன் சொல்லீர்
ஏத்திப் பணிந்தவள் பாதம் தொழுவீர்
கண்ணை இமையது காப்பது போலே
கண்ணிய மாயவள் காத்திடு வாளே
மண்ணில் ஒளிர்மணி பல்லவத் தீவில்
மாண்பும் நாக பூஷணி அம்மாள்

— நாக. சண்முகநாதபிள்ளை

(இன்று நயினை நாகபூஷணி அம்பாள் 10-ம் திருவிழா)

# “இலங்கை மலையாள மக்கள் அநாதைகளாகி வாழ்கின்றனர்”

[யாழ்ப்பாணம்]

''நாட்டிலே கலவரங்கள் தோன்றும் காலங்களில் முதலில் பாதிக்கப்படுவர்கள் இலங்கைவாழ் மலையாளிகள். அரசியல், பொருளாதார, சமுதாய அநாதைளாக வாழ்பவர்களும் நாமே. இங்கு சுமார் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட மலையாளிகள் வாழ்கிருேம். எமது மக்களின்குறைகளைப்போக்கி நலன் புரித்திட்டங்களை செயல்படுத்துவதில் 'மலையாளக் கலாலயம்' தவிர வேறு எவரும் எமக்கு உதவுவதில்லை.''

இவ்வாறு கொழும்பிலுள்ள மலையாளக் கலாலயத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்துக்கு தலைமைதாங்கி உரையாற்றுகையில் திரு. ஈ. கே. இராகவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ''நாட்டின் பல பாகங்களிலும் வாழும் மலையாளிகள் மிகவும் பின்தங்கிய நிலையில்இருப்பதுடன், மறைந்தொழியும் ஒரு சமுதாயமாகவே காணப்படுகின்றனர். இவர்களுக்கு நலன்புரித் திட்டங்கள்மூலம் உதவவேண்டும்.''

மேற்படி கலாலயத்தின் பொதுச் செயலாளர் திரு. இரா. சுப்பிரமணிய தாஸ்

(7-ம் பக்கம் பார்க்க)

# பலதும் பத்தும்

### வைக்கிருரா ஆப்பு?

சீன - சோவியத் உறவைத் தடுக்க முயன்று தோல்வி கண்டார் அமெரிக்க ஜனுதிபதி ஜோர்ஜ் புஷ். ஐரோப்பாவில் தன் பிடியை இறக்கிக் கொள்ள நேட்டோ மாநாட்டுக்குச் சென்றிருந்தார்.

பிரித்தானியாவிற்கும் ஜேர்மனிக்கும் இடையே சில கருத்து வேறுபாடுகள். அமெரிக்காவின் சுருதியறிந்து. தாளமறிந்து பின்னணி வாசிப்பதில் வல்லவர் தாட்சர் அம்மையார.ஜேர்மனியிலோ பழைய நாசிசவாடை மெல்ல வீசத் தொடங்குகிறது; இன எழுச்சி சற்றுத் தலைதூக்கப் பார்க்கிறது. இரண்டாவது உலகப் போரில் தோல்வி கண்ட - பல அழிவுகளைக் கண்ட நாடல்லவா ஜேர்மனி?

நேட்டோ மாநாட்டில் ஓரளவிற்கு விட்டுக் கொடுத்து, ஜேர்மனியின் புழுக்கத்தைத் தணிக்க முற்பட்டார் புஷ். அது மாத்திரமல்ல, பேர்லின் சுவரை இடித்துவிட வேண்டும் என்று முழங்கியிருக்கிரார். [illegible] சோவியத்தோடு நட்பை வளர்க்க முற்படும் ஜேர்மனியைச் சீண்டியிருக்கிருர்!

ஏன் இப்படி முழங்கினுர்? விஷயம் இப்போதுதான் புரிகிறது. கொபர்ச்சேவ் இன்று ஜேர்மனியில் குறுந்தூர ஏவாயுதத்தைக் குறைப்பு. பேர்லின்சுவர் போன்றபல பிரச்சனைகள் ஆராயப்படலாம், அமெரிக்க - ஜேர்மனி நட்புக்கும் ஆப்பு வைக்கலாம்!

அவசரப்படுவானேன்? இருநாடுகளினதும் கூட்டறிக்கை வெளிவரட்டுக்குமே?

-- வாணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்திரு அட்வகேட் எஸ். ஆ

**தோற்றம்:**
**11-05-1904**

# ——31-ம் நாள் நி

"தந்தையார் ஆஸ்திரேலியாவில் காலமாகியது உங்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கின்றேன்." இதைச் சொன்னவர் கனக ஈஸ்வரன். எனக்குத் தெரிந்திருக்கவில்லை. சுருக்கென்று இச்செய்தி மனதைத் தைத்தது. சொந்தத் தந்தையைப் பறிகொடுத்ததுபோல் மனம் சற்றுநேரம் படபடத்தது. கனகநாயகம் அவர்களும் போய்விட்டாரோ என்று அங்கலாய்த்தது மனம்.

எண்ணங்கள் பின்னேக்கிப் பறந்தன........

அக்கினிக்கு ஆளாகாத அன்றைய மல்லாகம் நீதிமன்றம்—

## மலை ஒன்று மறைந்துவிட்டது

முதுமை பீடித்திருப்பினும் அதைப் பொருட்படுத்தாத மிடுக்கு நடை; இளைஞர்களை வெட்கித் தலைகுனிய வைக்கக் கூடிய புன்முறுவல் பூத்த உற்சாகக்களை; மல்லாகம் நீதிமன்றம்கடமையில் ஆழ்ந்திருக்கும்போது திரு. கனகநாயகம் அவர்கள் மன்றினுள் நுழையும் விதம் கருத்தை ஈர்க்கும் ஒரு சந்தர்ப்பம்.

மூத்தவர்களும் இளைஞர்களுமாக எல்லாச் சட்டத்தரணிகளும் அவரைப் பார்த்துப் புன்முறுவல் பூப்பார்கள். பொதுமக்கள் அவர் சென்று அமரும்வரை வைத்தகண் வாங்காது அவரையே உற்று நோக்கியிருப்பர். மன்ற அலுவலர்கள் முகத்தில் ஒரு புன்னகை. நம்ம ஐயா வந்துவிட்டார் என்பதும்பால் அவரைப் பார்ப்பார்கள்.

இவை எல்லாவற்றையும் கவனித்தும் கவனியாதவர் போல் திரு. கனகநாயகம் அவர்கள்அலட்சியமாகநடந்து வந்துஆசனத்தில் அமருமுன் என்னை ஒருமுறை கூர்ந்து கவனிப்பார். நீதிபதி இன்று என்ன மனேநிலையில் இருக்கின்ருர் என்று என்னை எடைபோடுவதுபோல் இருக்கும் அவர் பார்வை! அதன் பின் நன்ருகப் பணிந்து மன்றுக்கு மரியாதை செய்துவிட்டு சட்டத்தரணிகளின் ஆசனம் ஒன்றில் அமர்வார்.

பொதுவர்க மன்றின் வலது பக்கத்தில் ஒரு குறிப்பிட்ட ஆசனத்தில் அமர்வார். இடது பக்கத்தில் வழக்கமாக காலஞ்சென்ற சட்டத்தரணி இளைய தம்பி அவர்கள் அமர்ந்திருப்பார். வந்ததும் வராததுமாக இளையதம்பி அவர்களை அல்லது யாராவது ஒரு சட்டத்தரணியை ஏதாவது ஒருவிதத்தில் கிளறிவிட்டு அல்லது சீண்டிவிட்டு வேடிக்கை பார்ப்பார். எவ்வளவு ஆத்திரம் ஊட்டுவதாக அவர் சொற்களும் சேஷ்டைகளும் இருந்தாலும் அவரின் குழந்தைத் தனம் மிக்க சிரிப்பும் புன்முறுவலும் எவரையும் அவருடன் கோபமுறச்செய்யாது.

இவற்றையெல்லாம் நீதிபதி இருக்கையில்இருந்துபார்த்தும் பார்க்காததுபோல்ரசிப்பேன். மல்லாகம் நீதிமன்றத்தை விட்டு நான்மாற்றலாகிச்செல்லும்போது தரப்பட்ட விருந்துபசாரத்தின்போது கனகநாயகம் ஐயா அவர்களைப் பற்றி நான்கூறியது நினைவுக்கு வருகிறது. "'பல்லாயிரத்தில் ஒருவர் கனகநாயகம்'' என்றேன். நீதிமன்றத் தந்திரோபாயங்களை வெகுவாக அவர் புரிந்துவைத்திருந்ததைக்குறிப்பிட்டேன். மன்றின்மனதைத் தன்பக்கம்ஈர்க்க என்னசெய்ய வேண்டும், அடுத்தவரின்கட்சிகையோங்கினுல் அவர்கள் சட்டத்தரணியை எவ்வாறு மட்டம் தட்டுவது என்பதெல்லாம் கனகநாயகம் ஐயா அவர்களுக்குக் கைவந்த கலை.

### விழிப்புத் தன்மையை வயது குறைக்கவில்லை

தன் கட்சிக்காரரின் வழக்கின் நிகழ்வுகளை மிக நுணுக்கமாக நினைவில் வைத்திருப்பார். மன்றில் எண்பது வயதைத் தாண்டிய இளையதம்பி ஐயா அவர்களும் கனகநாயகம் அவர்களும் மிக நுணுக்கமாக நிகழ்வுகளைத் தெரிந்து வைத்திருந்தமை என்னைமலைக்கச் செய்தது. வயதினைல் அவர் களை விழிப்புத் தன்மையை குறைக்கமுடியவில்லை.

அலட்சியமாகப் பேசும் சுபாவம் உடையவராயினும் திரு. கனகநாயகம் அவர்கள் எவர் மீதும்குரோதமோ,கோபமோ கொள்ளாதவர். குழந்தைகள் போல் எல்லாவற்றையும் மறந்துவிட்டு வாய்விட்டுச் சிரிப்பார்.

ஒருமுறை அவரின் கட்சிக்காரர் சார்பில் தமிழில்பதியப்பட்ட வழக்கு ஆவணங்களில் பல முரண்பாடுகளும், பிழைகளும் இருக்கக் காணப்பட்டன. இதை எதிர்க்கட்சிக்காரரின் சட்டத்தரணி வெகுவாகக் கண்டித்து வழக்கு ஆவணம் திருத்தப்படவேண்டும், செலவு கட்டப்படவேண்டும் என்றுவாதாடினுர். திரு.கனகநாயகம் அவர்களோ அதைப் பெரிதுபடுத்தாமல் ஆங்கிலத்தில் ஆவணங்கள் பதிந்து பழக்கப்பட்ட நாங்கள் தமிழில் பதிய எத்தனிக்கும்போது இப்பேர்ப்பட்ட பிழைகள் எழுவது சகஜம் என்று கூறி, கட்சிக்காரர் எதைக் கூறவந்தார் என்பதே முக்கியம் என்றும் எவ்வாறு அதைக்கூறினுர் என்பது முக்கியமல்ல என்றும் வாதாடினுர்.

சுமார் இரு மாத காலத்தின் பின் இன்னெரு வழக்கு, முன்னைய வழக்கைப் போல் ஆனுல் அடுத்தவர் வழக்காவணத்தில் தமிழில்பிழைகள் எழுந்து விட்டன. எப்படியாவது அடுத்த கட்சிச்காரரிடம் செலவு வாங்கி விளக்கத்தையும் தள்ளிப் போடவேண்டும் என்ற எண்ணத்தில் தமிழில் முறையாக வழக்காவணங்கள் பதியப்படவேண்டும், கட்சிக்காரர் எதைச் சொல்ல வந்தார் என்பது முக்கியமல்ல எப்படிச்சொல்லியுள்ளார் என்பது தான் முக்கியம் என்று ஆணித்தரமாக வாதாடினுர் திரு. கனகநாயகம் அவர்கள்.

முன்னைய வழக்கில் அவர் கூறிய வாசகங்களை அவருக்கு நினைவுபடுத்தி நேர் எதிராக அவர் வாதாடுவதை அவருச் சுட்டிக்காட்டினேன். "முன்னைய வழக்கில் கூறியவை பிழை என்றும் இந்த வழக்கில் தாம் கூறுவதே சரி என்றும் உடனேயே அவரிடம் இருந்து பதில் கிடைத்தது.'' சாதுரியமாக சாமர்த்தியமாக, நகைச்சுவை ததும்பக் கூறித் தப்பித்துக் கொள்வதில் அவருக்கு அவரே நிகர்.

### மனதை வாட்டும் எண்ணங்கள்

இலகுவில் எவரையும் மனம் விட்டுப் புகழாத கனகநாயகம் அவர்கள் ஈற்றில் மல்லாகம் விட்டு நான் வெளியேறும் போது மிகவும் வாஞ்சையுடன் புகழ்ந்து அனுப்பியதை நினைக்க அதே கனகநாயகம் அவர்கள் இன்று இவ்வுலகை விட்டு ஏகிவிட்டார் என்பதை நினைக்க அவருடன் இனி சுவாரஸ்யமாக அளவளாவ முடியாது என்பதை நினைக்க அவர்கள் எண்ணங்கள் மனதை வாட்டுகின்றன.

மல்லாகத்தை விட்டு ஏகும் காலத்தில் தான் நான்அறிந்து கொண்டேன். திரு. கனகநாயகம் அவர்கள் சட்டத்தரணிகளாக கடமையாற்றிய எனது தந்தை வழி தாய்வழி பேரனுர்கள் இருவரையும் தெரிந்து வைத்திருந்தார் என்பதை. பொதுவாக ஒவ்வொருவரின் குலகோத்திரங்களை, மூதாதையர்களைப் பற்றித் தெரிந்து வைத்திருப்பதில் திரு. கனகநாயகம் அவர்கள் சமர்த்தர். என்னுடைய தாயாரின் மூத்த சகோதரர் காலஞ்சென்ற சட்டத்தரணி இராம் ஈஸ்வராவைத் தனக்குத் தெரியும் என்று கூறிய அவர். திரு. இராம் ஈஸ்வரா சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் மூதாதையான மாணு முதலியாரின் வழிவந்தவர் என்றும், மாணு முதலியார் அரசன் பரராசசேகரரின் சிரேஷ்டமந்திரியில் ஒருவர் என்றும் கூறினுர். இது பற்றி அறிய அச்சுவேலி தம்பி முத்து அவர்கள் எழுதிய "மாமாம்பதியார் சந்ததி முறை"உதவிபுரியும் என்றும் கூறி அதன் பிரதி ஒன்றை எடுப்பதற்கு உதவி புரிவதாகவும் கூறினுர்.

திருகோணமலையில் சட்டத்தரணியாக வேலைபார்த்த எனது தந்தையின் தந்தையார் விஸ்வலிங்கம் அவர்கள் மானிப்பாய் அருணுசலம் முதலியாரின் பேரன் என்றும் தெல்லிப்பழையில் அவர்களுக்குக் கிட்டிய உறவினர்கள் இருந்தார்கள் என்றும் திரு. கனகநாயகம் அவர்கள் கூறினுர்.

கனகநாயகம் அவர்களுடன் பேசத்தொடங்கினுல் நேரமே போவது தெரியாது. சிரிக்கல் சிரிக்க பேசுவார். சிலேடைகளுடன் பேசுவார். கடைசியாக அவருடன்மனமவிட்டுப் பேசியது மகன் கனக: ஈஸ்ரவன் அவர்கள் ஜனுதிபதி சட்டத்தரணியாகப்பதவிப்பிரமாணம்செய்து கொண்டபின் தரப்பட்ட விருந்துஉபசாரத்தின்போது தான் அன்னுர்மிக வுஈகலகலப்பாக அன்று இருந்தார். பழைய முகங்கள் மிகக் குறைவு என்று கூறித் தனது இளநகை மறைக்கும் அவரின் முதுமையை நினைவுபடுத்திக் கொண்டார். ஆஸ்திரேலியா போக விருப்பதாகவும் கூறினுர்.

11-5-1904-ல் பிறந்து 15-5-89ல் உயிர்நீத்த திரு. கனகநாயகம் அவர்களின் மறைவுடன் யாழ்ப்பாணக் குடா நாட்டின் சட்டத்தரணிகளில் பழையதலை முறையினர் யாவரும் எம்மை விட்டு ஏகிவிட்டனர் என்றே நினைக்கின்றேன்.

**- க. வி. விக்னேஸ்வரன் -**
(மேல் நீதிமன்ற நீதிபதி, பதுளை)




அன்னரின் ஆத்மசாந்திக்கு
பிரார்த்திக்கின்றேம்

கே. கே. ஏ. கந்தையாபிள்ளை
316, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

க. கு. சங்கரப்பிள்ளை
308, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

சிற்றி ஏஜென்சி
158, ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

விஞயகர் ஸ்ரோர்ஸ்
166, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

கே. என். எம். மீறுன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
கன்ஞதிட்டி

குகன் ஸ்ரோர்ஸ்
180 (380), ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

ஸ்ரீ கிருஷ்ணபவான்
சைவபோசனசாலையும் சிற்றுண்டிச்சாலையும்
171 (37), கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

கணேசன் ஸ்ரோர்ஸ்
63 (201), கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

கலைவாணி நகை மாளிகை
111B, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்


## சிரித்

### சிரி

"ஒன்ரு உல
புகழல்
பொன்ருது

மனமகிழ்ச்சி
தன்; விகடக்க
போன்ற புனி
வாழ்வு பேரான
நெஞ்சு நிறைந்
இப்பிறவிப்பேறு
வேண்டும்.

இந்த வண்ண
வம் – சந்ததமும்
மும் அமைந்த அ
பையா இரத்தின
நாயகம் என்னும்
சினமிலான் மன
நினைவும் கனவும்
நகைச் சுவையு
ஆர். கனகநாயக

'இடுக்கண் வரு
என்று வள்ளுவன்
சிந்தனையைஉற்று
சிரிப்பது ஒருகலை
கருத்தினைப்

## சிந்திக்

## சைவம்வ

## திறந்த

தமிழுக்கும் சை
மாக சேர். பி. இராம
இந்துபோர்- இராச
ஆகிய இரு பெரியாரு
சேவையை தமிழ்பேசு
மறக்கமுடியாது.
இருவரும் காட்டிய
அவர்கள் செய்த

கனகநாயகம் அவ
மறைவுடன் வட இல
சட்ட அரங்கிலை இது
ஓங்கி நின்ற மலைபெ
மறைந்து விட்டதெ
நினைக்கிறேன். அமைதி
இவ்வுலகவாழ்வைவிட்டு
அன்னரின் ஆத்மா
அடைவதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர். கனகநாயகம் அவர்களின் நினைவுமலர்

மறைவு:
15 - 05 - 1989

## த்துக்கொண்டேவாழ்ந்தார்
### சிரித்தபடியே திருவடி சூழ்ந்தார்

" உலகத் துயர்ந்த
புகழல்லால்
ஒறு நிற்பதொன்
றில்''

கிழ்ச்சிக்கொரு மனி
டசக்கரக் கணபதி
புனிதன், மாநில
பரானந்தமே என்ன
நிறைந்தவன்;என்றுல்
பிப்பேறு வேறென்ன
ம்.
வர்ணனைக்குரிய உரு
ந்ததமும் ஆனந்த
மைந்த அண்ணல் சுப்
இரத்தினசிங்கம் கனக
என்னும் கனவானே.
ான் மனநெகிவுளான்
கனவும் கனிவான
சுவையுளான் எஸ்.
னகநாயகம்.
க்கண் வருங்கல்நகுகா'
வள்ளுவனுர் கொள்ளும்
யை உற்று நோக்கின்
து ஒரு கலையாகும். இக்
னைப் பொருத் திப்

போலும் ''கவலையைத்தீர்ப்பது நாடகக்கலையே'' என்று ஒரு சிந்துச்சந்தக் கவியெழுந்தது. நாடகம் விகடத்துடன்

**நம. சிவப்பிரகாசம்**

ஊடுருவியுள்ளது.

கனகநாயகம் அவர்கள் மனோகரா நாடகத்தில் நடித்தார். ஆனந்தாக்கல்லூரியில் ஆசானுய் அமைந்த அந்நாளில் யாவரும் கைகொட்டி இன்புற நடித்தார்.

கவலையறியாத கனகநாயகம் அவர்களைப்பற்றி எழுதுவதென்றுல் கவலையற்றவர்களுக்கே அது அமையும்.

கனகம் - பொன் - நகை அமையவுள்ளபொருள் எனவே நகைச்சுவை நாயகம் ஆனுர் எங்கள் ஆப்த நண்பன்.

இளம் பராயத்திலே தந்தையாரை இழந்த நிலையில் தாய்மையின் அன்புத்தூய்மையில் வளர்ந்த நாயகம் அவர்கள் வெள்ளிக்கமலம் போன்று மிளிர்ந்த வண்ணமாய் எழுந்தார். வெண்மை வண்ணத்தான் வாணியும் நனி நண்ணிகள். யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் சுழிபுரம் விக்ரோரியா வித்தியாலயத்துக்கும் இடையே போக்கும் வரவும் ஆக அமைந்த புரட்சிக்காட்சியுமொன்றுண்டு. சைவப் பெரியார் சிவபாதசுந்தரனுரின் சமய எழுச்சிக்காலம்

(7-ம் பக்கம் பார்க்க]

## நல்லை ஆதின செய்தி

அமரத்துவம் எய்திய எஸ். ஆர். கனகநாயகம் அவர்களை அறியாதார் இந்நாட்டில் இலர் எனலாம்.

நல்லை ஆதினத்தோடு தொடர்புடையவர். சைவமே தன்னுயிரென வாழ்ந்து காட்டிய பெருமகனுர் ஒருசிரேஷ்ட வழக்கறிஞராக இருந்தும், அவர் பேச்சு மென்மையும் அமைதியும் ஆழ்ந்த கருத்தடக்கமும் சுருக்கமுமாக அமையும்.

அன்பு சொரியும் முகத்தேஜசும் ஆடம்பரமில்லாத எளிய வெள்ளை உடையிலும்

(7-ம் பக்கம் பார்க்க)

## அறிவுசால் சட்டவல்லுநர்

அமரர் எஸ். ஆர். கனகநாயகம் காலமானுர் என்ற செய்தி அவரின் நண்பர்களுக்கும் அவரோடு நெருங்கிப் பழகியவர்களுக்கும் பேரதிர்ச்சியாக இருந்தது. ஏறக்குறைய 1965ம் ஆண்டு தொடக்கம் அவரோடு பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது. அன்று தொடக்கம் இன்று வரை அவருடைய உருவத்தோற்றத்தில் எவ்வித மாற்றத்தையும் என்னுல் அவதானிக்க முடியவில்லை அவரைப்போல முகத்தில் கவலையில்லாமல் எப்போதும் குதூகலமாகவும், சுறு சுறுப்பாகவும் இருக்கும் ஒருவரை காண்பது அரிது என்றே கூற வேண்டும்.

அமரர் திரு. கனகநாயகம் விக்ரோறியாக் கல்லூரியிலும் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் தமது கல்வியை கற்றுப் பின்னர் கலைப்பட்டதாரியாகப் பட்டம் பெற்றுர். சட்டத்துறையில் பிரவேசிக்க முன்னர் சிறிது காலம் கொழும்பு ஆனந்த கல்லூரியில் ஆசிரிய

**கா. கணபதிப்பிள்ளை**
(மாவட்ட நீதிபதி,
மல்லாகம்)

ராகவும் பணியாற்றியுள்ளார். பின்னர் சட்டம் பயின்று நியாயவாதியாகத் தனது தொழிலை யாழ்ப்பாணம் மாவட்டம் நீதிமன்றத்தில் ஆரம்பித்து குறுகிய காலத்தில் தனது வாதத் திறமையாலும் சட்ட அறிவினுலும் சிறந்த

(7-ம் பக்கம் பார்க்க)

## சிறந்த சைவத் தலைவர்

இந்த நூற்றுண்டில் யாழ்ப்பாணம் ஈன்றெடுத்த சிறந்த தலைவர்களுள் ஒருவரான திரு. எஸ், ஆர். கனகநாயம் அவர்கள் சிவபதமடைந்தார் என்ற தகவல் அவருடன் உறவாடிய அனைவருக்கும் எதிர்பாராத ஒரு செய்தியாக இருந்தது. இயற்கையெய்திய 31-ம் நாளான இன்று அவர் சேவைபுரிந்த சைவ வித்தியா விருத்திச் சங்கம் அன்னுருக்கு நினைவஞ்சலி செலுத்துகின்றது. இச் சந்தர்ப்பத்தில் அன்னுர் பொதுவாகத் தமிழ் மக்களுக்கும் குறிப்பாக சைவ மக்களுக்கும் ஆற்றியமகத்தான தொண்டினை நினைவுகூர்வது சாலப்பொருந்தும். அவருடையதொண்டு பல கோணங்களில் அமைந்திருந்தது.

எஸ். ஆர். கனகநாயகம் ஐயா தனது தொழிலுக்கு மேலாகத் தான் சார்ந்த தமிழ்ச் சமூகத்திற்குத் தனது வாழ்வை அர்ப்பணித்திருந்தார். அவர் எப்பொழுமே

**ச. வை. பரமேஸ்வரன்**
(தலைவர், சை. வி. ச.)

தமிழுக்கும் சைவத்துக்கும் அரும்பாடுபட்டவர். எங்கு சென்றுலும் சைவ மரபினைப் பெருமையுடன் பறைசாற்றியவர். அவரின் தமிழ்ப் பற்றும் தேசப்பற்றும் காரணமாக முன்னைய இலங்கைப் பாராளுமன்றத்தின் மேற்சபை அங்கத்தினராக நியமிக்கப்பட்டதுடன் சிறந்த தமிழ்ப் பிரதிநியாகவும் விளங்கினுர்.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்துடன் ஐயாவுக்கிருந்த நீண்டகாலத் தொடர்பு தமிழ் மக்களின் கல்வியில் அவருக்கிருந்த அக்கறையை எடுத்துக்காட்டுவதாகும். இந் நூற்றுண்டின் தொடக்கத்தில் சைவப் பிள்ளைகள் தங்கள் கல்விக்காகப் பிறமதங்களுக்கு மாற்றப்படுவதைக் கண்ட சேர். பொன். இராமநாதன், சேர். வை. துரைசுவாமி, திரு. எஸ். இராசரத்தினம் போன்ற சைவப் பெரியார்களும் தமிழ் அபிமானிகளும் 1923ல் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தை நிறுவிப் பல கல்வி ஸ்தாபனங்களைச் சைவ மரபிற்கேற்ப நடத்திவந்தார். இச்சங்கம் பிற்காலத்தில் இந்துபோட் இராசரத்தினத்தின் வழிகாட்டலிலும், கனகநாயகம ஐயா போன்றோரின் உதவியுடனும் [illegible] ...த்தப்பட் ... ஒரு ஆசிரியர் பயிற்சிக்

(7-ம் பக்கம் பார்க்க)

## ந்திக்கும் திறம்வாய்ந்த சேவையாளன்

மதிமுகத்தன் சுதிநடையன் மயக்கும் பார்வை
மாசற்ற முறுவலுடன் மனமார் வாழ்த்து
பொதியமலை முனிவரைப்போல் பொலிந்த மேனி
பூந்துகிலாம் உடையுடனே ஊன்றும் கோலும்
கதியென்று வருபவரைக் காக்கும் நெஞ்சம்
காசியமாய்ப் பேசுதலும் களிப்பும் பூண்ட
முதுசட்டத் துறையாளன் கனகநா யகமோர்
மூதறிஞன் முதுதமிழன் புரவல னுமாவன்

சிந்திக்கும் திறம்வாய்ந்த சேவை யாளன்
சீரியகற் பண்பாளன் சிறப்பு மிக்கான்
சந்ததமும் உரையாட வல்லான் நல்லான்
சாதனைகள் பலபுரிந்த சலியா வீரன்
பந்தமுடன் சைவமதச் சிறுருக் காகப்
பாங்காக அறப்பணிகள் ஆற்றி வந்து
கந்தனையே வந்தனையால் வாழ்த்தி நின்ற
கனகநாயகம் விட்டபணி தொட்டே நிற்போம்

- வி. வ. இளங்கோ

## சைவம்வளர குரல்கொடுத்த திறந்த மனத்தினர்

தமிழுக்கும் சைவத்திற்கு
மாக சேர். பி. இராமநாதன்,
இந்துபோர்ட் இராசரத்தினம்
ஆகிய இரு பெரியாரும்செய்த
சேவையை தமிழ்பேசும் இனம்
மறக்கமுடியாது. அவர்கள்
இருவரும் காட்டிய வழியில்
அவர்கள் செய்த பணிகள்

தொடர்பாக அவர்களின் சொத்துக்களையும் ஸ்தாபனங்களையும் குரல் கொடுத்து பாதுகாத்தவர் உயர்திரு அட்வகேட் எஸ். ஆர். கனகநாயகம் அவர்கள் என்பதை யாரும் ஏற்றுக்கொள்வார்கள்.

திரு. இராசரத்தினம் அவர்கள் 50 வருடங்களுக்கு முன் சைவப் பாடசாலைகளை அமைத்து சைவத்தையும் தமிழையும் வளர்த்தவர். அந்நேரத்தில் எவருக்கும் அஞ்சாது அவருக்கு உதவியாய் இவர் குரல்கொடுத்தார்!

இந்துபோட் இராசரத்தினம் அவர்கள் சைவவித்தியாவிருத்திச்சங்கத்தின் தலைவராகவும் மனேஜராகவும் சேவையாற்றி மறைந்த பின் அச்சங்கத்தை யார் நடத்துவதென்று சிந்தித்தபோது எஸ். ஆர். ஐயா பொறுப்பேற்று 17 வருடங்களாக அச்சங்கத்தின் தலைவராகவும் மனேஜராகவும் இருந்து கடமையாற்றினுர். அவர் அப்பதவியை வகிக்கும் காலம் பல இடைஞ்சல்கள், முக்கியமாக நிதிக்கஷ்டம் ஏற்பட்டபொழுதெல்லாம் தமது

**க. மு. தர்மராசா**
(பிரசித்த நொத்தாரிஸ்)

பணத்தை முற்பணமாக வருடக்கணக்கில் செலுத்தியது மட்டுமன்றி மாதாமாதம் தனது பணத்தையும் செலவு செய்து அப்பதவியை வகித்தார் என்பது பலருக்குத் தெரியாது.

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை [illegible]

[7-ம் பக்கம் பார்க்க)

கனகநாயகம் அவர்களின் மறைவுடன் வட இலங்கைச் சட்ட அரங்கிடை இதுகாறும் ஓங்கி நின்ற மலையொன்று மறைந்து விட்டதென்றே நினைக்கிறேன். அமைதியுடன் இவ்வுலகவாழ்வைவிட்டு நீத்த அன்னுரின் ஆத்மா சாந்தி அடைவதாக!

அன்னுரின் ஆத்மசாந்திக்கு
பிரார்த்திக்கின்றேம்

**இ. ச. பேரம்பலம் அன் சன்ஸ்**
50, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்

**பெற்ரு ஏஜென்சி**
ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

**சிவன் மாளிகை லிமிட்**
166 (80), கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

**ஸ்ரீ தாமோதர விலாஸ்**
239, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

**மகாராணி ரெக்ஸ்ரைல்**
50, பெரியகடை
யாழ்ப்பாணம்

**கௌரி ரேடர்ஸ்**
22, கே. கே. எஸ். வீதி (சத்திரச்சந்தி)
யாழ்ப்பாணம்

**வசந்தா பார்மஸி & குரேசரிஸ்**
ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

**நியூ ஆனந்தா ஸ்ரோர்ஸ்**
60, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவில் மனித உரிமைகள் தொடர்ந்துமீறப்படுகின்றன

## அமெரிக்கா மீண்டும் கண்டனம்

[வாஷிங்டன்]

சீனாவில் ஜனநாயக ரீதியில் மாணவர் நடத்திய போராட்டத்தை, சீன அரசாங்கம் அடக்குமுறையைப் பயன்படுத்தி நசுக்கியதை அமெரிக்கா மீண்டும் கண்டித்துள்ளது.

சீனாவில் ஜனநாயகப் போராட்டத்தை அடக்குவது என்ற பெயரில் ஆயிரக்கணக்கான மக்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர் என்றும், மனித உரிமைகள் அங்கு தொடர்ந்து மீறப்படுகின்றது என்றும் அமெரிக்க ராஜாங்க அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளையில் சீனாவில் மாணவர் போராட்டம் ஆரம்பமானதற்குப் பின்னர் புதிய னன்மென் சதுக்கப் பகுதி நேற்று முதல் தடவையாகப் பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்துவிடப்பட்டதென சீன செய்திகள் தெரிவிக்கின்றன.

மாணவர் தலைவர்களும், அவர்களுக்கு ஆதரவளித்தவர்களும் தொடர்ந்து கைதுசெய்யப்படுகின்றனர் என்றும் இவர்கள்மீதுகடும்நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் சீன அரசு தெரிவித்துள்ளது.

### "இந்திய எதிர்க்கட்சிகளின் அமைதிப்படைவெளியேற்றக்கோரிக்கை

## சுயநல அரசியல் நோக்கம் கொண்டது"

[புதுடில்லி]

"இந்திய அமைதிப்படை இலங்கையிலிருந்து உடனடியாக வெளியேறவேண்டும்என இந்திய எதிர்க்கட்சிகள் கூறியுள்ளமை சுயநல - அரசியல் நோக்குடையது."

இவ்வாறு இந்திய முன்னாள் வெளியுறவு அமைச்சர் திரு. எஸ். என். மிஷ்ரா தெரிவித்தார்.

உடனடியாக இந்தியப்படைகள் வாபஸ்பெறப்பட்டால் இலங்கையில் நிலைமை மோசமடையும் என்றும் திரு. மிஷ்ரா தெரிவித்தார்.

### அஹிம்சை, உலக சகோதரத்துவம் போன்ற

## இந்திய மரபுகளை மாணவர்கள் பரப்பவேண்டும்

### ராஜீவ் கூறுகிறார்

(புதுடில்லி)

"அஹிம்சை, உலக சகோதரத்துவம் போன்ற இந்திய மரபு நெறிகளை எமது மாணவர் வெளிநாடுகளில் பரப்பவேண்டும்."

இவ்வாறு இந்தியப் பிரத

(7ம் பக்கம் பார்க்க)

## 9வயது தாயும் சேயும் நலம்!

(கொலம்பியா)

உலகின் முதலாவது வயது குறைந்த தாய்க்குப் பிறந்த பெண்குழந்தை நலமாகவிருப்பதாக கொலம்பியாவில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தென் அமெரிகாவிலுள்ள கொலம்பியாவில் விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஒன்பது வயதுச் சிறுமிக்கு கடந்தவருடம் டிசம்பர் மாதம் பதினாலும் திகதி "சிஸேரின்" முறையில் பெண்குழந்தை ஒன்று பிறந்தது. குழந்தையின் எடை 2. 3 கிலோ.

இக்குழந்தைக்குஆன் லூசியா எனப்பெயரிடப்பட்டுள்ளது.

போகோட்டா என்ற இடத்திலுள்ள மிகச் சிறந்த மகப்பேற்று நிலையத்தில் இக்குழந்தை பிறந்தது.

இந்த 9 வயது தாய்க்கு சத்திரசிகிச்சை செய்த டாக்டர் பெர்னண்டோ, எந்தக் கட்டணத்தையும் வாங்க மறுத்துவிட்டார். அவர் இதுகுறித்து தெரிவிக்கையில் "இக் குழந்தையைப் பிரசவித்த, தாயார் மார்த்தாவுக்கு மூன்று வயதிலேயே பாலியல் உறுப்புக்கள் வளர்ச்சி காணப்பட்டது. சிறுமியின் உடற்கூற்று முழுமையாக வளர்ச்சி பெற்றிருந்ததால்தான் கருத்தரிப்பையும், அதைத் தொடர்ந்து "சிஸேரியன்" முறையில் மகப்பேற்றையும் வெற்றிகரமாக எதிர்கொள்ள முடிந்தது" என்றார்.

மார்த்தா சென்ற ஆண்டு நவம்பரில்தான் தனது ஒன்பதாவது வயதை எட்டினாள். அவள் ஒரு குழந்தைக்கு தாயாகப்போகிறாள் என்று டாக்டர்கள் சொன்னதும் அவளது பெற்றோருக்கு முதலில் அதிர்ச்சியும் பின்பு மார்த்தாமீதும் அவளது இந்த நிலைக்கு காரணமான அவளுடைய பதினெட்டு வயது தாய் மாமன் மீதும் கோபம் எழுந்ததாக அறியப்படுகிறது. தீவிர கத்தோலிக்கர்களான அவர்களது குடும்பத்தவர் கடைசிவரை மார்த்தாவுக்கு கருச்சிதைவு செய்ய விரும்பவில்லை.

### வெளிநாடுகளிலிருந்து ஐ. நா. அமைதிப்படை

# நமீபிய அரசியல் கைதிகளை நாட்டுக்குள் அழைத்து வருகிறது

[பிரிட்டோரியா]

நமீபியாவில் இவ்வாண்டு நவம்பர்மாதத்தில் நடைபெற உத்தேசிக்கப்பட்டுள்ள பொதுத்தேர்தலுக்கு முன் வெளிநாடுகளில் தஞ்சம்புகுந்திருக்கும் 41 ஆயிரம் நமீபிய அகதிகளையும் அவர்களது தாய்நாட்டுக்குத் திருப்பி அழைக்கும் பணியில் ஐக்கிய நாடுகள் சபை அமைதிப் படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளையில் வெளிநாடுகளில் உள்ள சகல அரசியல் கைதிகளுக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்படும் எனத் தென்னாபிரிக்க அரசு தெரிவித்ததையடுத்து அகதிகள் நமீபியா திரும்பத் தொடங்கியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நமீபியாவிலிருந்து முன்னர் தப்பிச்சென்ற அரசியல் கைதிகள் நேற்று ஐ. நா. அமைதிப் படையின் உதவியுடன் நூற்றுக்கணக்கில் நாடு திரும்பிய போது அவர்களது உறவினர்களும், நண்பர்களும் விமான நிலையத்தில் நின்று மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

# "மாகாணசபை அதிகாரங்களை மத்தியஅரசிடமிருந்து பெறுவதேநோக்கம்'

## முதல்வர் வரதராஜப்பெருமாள் விளக்கம்

(சாவகச்சேரி)

"வட-கிழக்கு மாகாண சபையைப் பலப்படுத்தி அதற்கான அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து பெறுவதே எமது முக்கிய நோக்கமாகும். அதற்காக நாம் ஒவ்வொரு கண நேரத்தையும் செலவிட்டு வருகின்றோம். நாம் இச்சபையைத் தொடர்ந்து ஆளவேண்டுமென்பது எமது நோக்கமல்ல. ஆனால் எதிர்காலத்தில் மாகாண சபையைப் பொறுப்பேற்பவர்களுக்குச் சகல அதிகாரங்களும் பொருந்திய சபையாக ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்பதே எமது விருப்பம்."

இவ்வாறு வட-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள், சாவகச்சேரியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

சாவகச்சேரி மாகாணசபை உறுப்பினர் திரு. எஸ். ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் யாழ். மாவட்ட எம். பி. திரு சுரேஸ் பிரேமச்சந்திரனும் உரையாற்றினார்.

முதல்வர் திரு. வரதராஜப் பெருமாள் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"தற்போது மாகாணசபைகளுக்கான அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து கேட்டுக் களைத்த நிலையில், முதற் கட்டமாக வட-கிழக்குப் பகுதிக்கான போக்குவரத்துச் சபை நிர்வாகத்தை நாம் முழுமையாகப் பொறுப்பேற்று நடாத்துவதென மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டோம்.

"அதேபோன்று அடுத்த கட்டமாக வட-கிழக்குப் பகுதியில் கடமையாற்றும் அரச அதிபர்கள் மாகாண சபையின் அனுமதியின்றி கொழும்புடனான தொடர்புகளை ஏற்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்துவோம். இதேபோன்று எமக்கான அதிகாரங்களை நாமே ஏற்படுத்திக்கொள்கின்ற நிலையை உருவாக்குவதே எமது நோக்கமாகும்."

இன்று இலங்கை அரசாங்கத்தின் குறிக்கோள், இந்திய அமைதிப் படையை வெளியேற்றிவிட்டு, மீண்டும் இலங்கை இராணுவத்தை வட கிழக்குப்பகுதிகளுக்கு அனுப்ப வேண்டும் என்பதாகும். இந்நிலை சரியானதா? எமக்கு எவ்வளவு சாதகமானது என்பதை வடகிழக்கில் வாழ்கின்ற ஒவ்வொரு தமிழ்மகனும் சிந்திக்க வேண்டும்."

1983ல் இருந்து 1987 வரை 30,000 தமிழ் மக்கள் அழிக்கப்பட்டதையும், மூன்று லட்சம் தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டதையும், பல நூற்றுக்கணக்கான எமது தமிழ் பெண் சகோதரிகள் கற்பிழந்ததையும், பல கோடிக்கணக்கான பெறுமதியான எமது பொருளாதாரம் நிர்மூலமாக்கப்பட்டதையும் உலகம் அறியும்."

"திருமலையில் 56 தமிழ்க் கிராமங்கள் அழிக்கப்பட்டதை திருமலையில் வாழ்கின்ற தமிழ் மக்கள், சிங்கள இராணுவத்தால் பட்ட துன்பங்களையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்" என்றும் கூறினார்.

### அமெரிக்க அதிபர் புஷ் யோசனை:

# "ஆயுதக்குறைப்பு ஒப்பந்தம் ஒன்றுக்கு விரைவில் வழிவகுக்கும்"

## கொர்பச்சேவ் மகிழ்ச்சி

[பொன்]

"ஐரோப்பாவில் உள்ள அமெரிக்க – சோவியத் படைகளைக் குறைக்கவேண்டும் என அமெரிக்க அதிபர் திரு. ஜோர்ஜ் புஷ் தெரிவித்திருந்த யோசனை ஆயுத குறைப்பு ஒப்பந்தமொன்றை விரைவில் செய்துகொள்ள வழிவகுக்கும்."

இவ்வாறு சோவியத் அதிபர் திரு. மிக்கைல் கொர்பச்சேவ் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

சோவியத் யூனியனின் ஆயுதப் பரிகரண முயற்சியில் அமெரிக்கா முதற் தடவையாக அக்கறைகாட்டியுள்ளது என்பதை ஜனாதிபதி திரு. புஷ்ஷின் கூற்றுக்கள் எடுத்துக்காட்டுகிறது என்றும் திரு. கொர்பச்சேவ் தெரிவித்தார்.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தமது மேற்கு ஜெர்மன் விஜயத்தின்போதே திரு. கொர்பச்சேவ் இவ்வாறு தெரிவித்தார்.

## கருணாநிதி, அலெக்சாண்டர் அனுதாபம்

(சென்னை)

சென்னை நீதிமன்றத்திற்கும் மணலிக்கும் இடையில் இடம்பெற்ற பஸ் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் நிதியிலிருந்து 2லட்சம் ரூபா வழங்கப்படுமென முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தெரிவித்தார்.

விபத்தில் மரணமான குடும்பத்தினருக்கு அனுதாபம் தெரிவித்த திரு. கருணாநிதி ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறுபவர்களை நேரில் சென்று பார்த்து ஆறுதல் கூறினார்.

தமிழக கவர்னர் திரு. பி. சி. அலெக்சாண்டர், தமிழ் [illegible] ஆகியோரும் தமது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளனர்.

## 110 இலோ மீட்டர் தூர சங்கிலிப் போராட்டம்

(சென்னை)

காவிரி நீர்ப்பிரச்னையைத் தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு கோரி சுமார் 2 லட்சம் விவசாயிகள் தமிழ்நாட்டில் மனித சங்கிலிப் போராட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

தஞ்சாவூர் முதல் வேதாரணியம் வரையிலான 110 கிலோ மீட்டர் தூரம் வீதியின் இரு மருங்கிலும் [illegible] கோர்த்துநின்று இப்போராட்டத்தை நடத்தினார்கள்.

## சீக்கிய தீவிரவாதிகளே காரணம்?

[புதுடில்லி]

புதுடில்லி ரயில் நிலையக் குண்டுவெடிப்புக்கு சீக்கிய தீவிரவாதிகளே காரணம் என்று பொலிசார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள்பற்றித் தகவல் தருபவர்களுக்கு 20 ஆயிரம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்றும் பொலிசார் தெரிவித்தனர்.

## "தேச விரோதச் செயலுக்கு ஒப்பானது"

[சென்னை]

"இலங்கையிலிருந்து இந்திய அமைதிப்படையை வாபஸ்பெறவேண்டும் என்று கோருவது தேச விரோத செயலுக்கு ஒப்பானதாகும்".

இவ்வாறு தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. வாழப்பாடி இராமமூர்த்தி தெரிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சைவம் வளர

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களாக ஏறக்குறைய225பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு ஆளுக்கு ரூபா 50/- வீதம் அரசாங்கம் நன்கொடைப் பணமாகக் கொடுத்து வந்தது. அப்பணத்தை அந்தந்த மாதங்களில் கொடாமல் ஒருவருடம் கழித்தும் கொடுபட்டுவந்தது. இந்நிலையில் அவருடைய தனிப்பட்ட செல்வாக்கினாலும் புத்தி சாதுரியத்தினாலும் அந்த அனாதை இல்லம் நடத்தப்பட்டு வந்தது. அவர் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை நடத்தியது பற்றி அச்சங்கத்தின் கௌரவ செயலாளர் டாக்டர் க. கிருஷ்ணானந்தசிவம் தனது 66ம் ஆண்டு அறிக்கையில் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

''சேர். பொன். இராமநாதன், திரு. எஸ். இராசரத்தினம் அவர்கள் வழிவந்து, இச்சங்கத்திற்கு அளப்பரிய சேவைகள் புரிந்த எமது முன்னாள் தலைவரான திரு. எஸ். ஆர். கனகநாயகம் அவர்களை நினைவு கூருதல் பெருமையுடையதாகும்.

''காலமாற்றத்தால் ஏற்பட்ட தன்மைகளை நன்கு உணர்ந்து, சைவ வித்தியா விருத்திச்சங்கம் சீரியவழியில் செயற்படவும், அதன் பெருமைகளையும், உடைமைகளையும் காப்பாற்றி சேவை மனப்பான்மையுடனும் வழிநடத்திய உத்தமர் அவர்.''

சேர். பொன். இராமநாதன் அவர்கள்விட்டுச்சென்றசொத்துக்களுக்கு பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை, சைவ கல்வி 'றஸ்ற்' ஆகிய இரு சபைகள் உள்ளன. இந்த இரு தர்மகர்த்தா சபைகளை ஏற்படுத்திய உரிமை எஸ். ஆர். ஐயாவுக்கே உரியது. அவர் சேர். பொன். இராமநாதன் விட்டுச்சென்ற மரணசாதனப்படி அவரின் நம்பிக்கைச் சொத்துக்களை பாதுகாப்பதற்கு இந்த இரு தர்மகர்த்தா சபைகளும் ஸ்தாபிக்கப்பட்டன.

மேலும்சேர். பொன். இராமநாதன் அவர்களின் நம்பிக்கைச் சொத்துக்குச் சேரவேண்டிய ஆதனத்தை தனிப்பட்டோர் சிலர் தமக்கு சொந்தமானது என்ற முறையில் பிரிவிடுதல் செய்வதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்தபோது தமது செலவில் தனிப்பட்டமுறையிலும், தனது மகன் திரு. கனக ஈஸ்வரனின் உதவியுடனும் வாதாடி குறித்த வழக்கைத் தள்ளுபடிசெய்யச் செய்து சம்பந்தப்பட்ட கொழும்பில் இருக்கும் ஆதனங்களை தர்மச் சொத்தாக்கினார்.

### யாழ். பல்கலைக்கழகம் உருவாக உழைத்தவர்

யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் அமைவதற்கு பல வழிகளிலும் இவர் முயற்சித்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முதல் ஆளுநர் சபையிலும் இவர் அங்கத்தவராகப் பணியாற்றினார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் சட்டத்துறையில் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமல்ல சாதாரண மக்கள் பலருக்கும் அப்புக்காத்து கனகநாயகம் என்றால் தனிப்பட்ட முறையில்தெரியாவிட்டாலும் பெயரளவில் தெரியாமல் இருக்கமாட்டாது. யாழ்ப்பாணக்குடாநாட்டில் மாவட்ட நீதிமன்றங்களில் இலங்கையில் பிரபல்யம் வாய்ந்த சிறந்த சிவில் சட்டத்தரணி திரு. தியாலிங்கம் கியூ. ஸி. ஒரு வழக்கில் ஏற்பட்டால் மறு பக்கத்திற்கு யாழ்ப்பாணத்தில் ஏற்படக்கூடியவர், ஏற்பட்டு வழக்கை திறம்பட வாதாடியவர் எஸ். ஆர். தான் என்பதை சட்டத்துறையைச் சேர்ந்த பலரும் ஏற்றுக்கொள்வார்கள்.

### அமெரிக்காவில்

இவர் தனது நகைச்சுவையின் திறமையை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல அவர் சென்ற இடமெல்லாம்வெளிக்காட்டத்தவறவில்லை. செனட்டராக இருந்தபோது அமெரிக்காவுக்குச் சென்ற சமயம் ஒரு மாநாட்டில் உரையாற்றிய அவர் சபையோரைப் பார்த்து ''உங்களுக்கு எழுதத் தெரியாது, வாசிக்கத் தெரியாது'' என்று கூறியபொழுது அவர்கள் எல்லோரும் திடுக்குற்று விழித்தார்கள். அப்போது ''இங்கே எல்லாம் கம்யூட்டர் மயம்'' என்று கூறியதும் சகலரும் சிரித்து மகிழ்ந்தார்கள்.

அவர்சமுதாயத்தில்அமைதியான வாழ்க்கையை எளிமையான முறையில் வாழ்ந்து காட்டினார். அவரின் இல்லம் எப்பொழுதும் அமைதியாகத்தான் இருக்கும். இதற்கு முக்கிய காரணம் அவரின் துணைவியாரே. மேலும் அவரின் பெருமையையும் புகழையும் அழியாமல் பாதுகாப்பதற்கு அவரின் பிள்ளைகளும் துணையாக இருக்கிறார்கள். குறிப்பாக அவரின் மகன் திரு. கனக ஈஸ்வரன் ஜனாதிபதி சட்டத்தரணியாக சட்டத்துறையில் உன்னத நிலையில் முன்னேறிக் கொண்டிருக்கிறார்.

இவர் தனது 86வது வயது பிறந்த தினத்தை கடந்த மாதம் 11ம் திகதி ஆஸ்ரேலியாவில் தனது மகள் வீட்டில் இருந்து மகன் வீட்டுக்குச் சென்று கொண்டாடி அங்கு தனது சட்டத்துறை நண்பர்களைச் சந்தித்து கலந்துரையாடினார். 14ம் திகதி தனது மகள் வீட்டிற்குச்சென்றுஇரவு உணவு அருந்தி விட்டு இரவு 11–30 மணி வரை வானொலிச் செய்தி கேட்டு புதினப்பத்திரிகைகள் வாசித்துவிட்டு நித்திரைக்குச் சென்றார். மறுநாள் அதிகாலை 2–00 மணியளவில் அவரின் ஆன்மா பிரிந்துவிட்டது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

---

நியூசாந்தி யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
20th Century Presents
VAN RYANS EXPRESS
(C/scope)

ஹரன் சினிமா
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30
சத்தியராஜ்–பிரபு நடித்த
சின்னத்தம்பி பெரியதம்பி

---

## சிறந்த சைவ

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்லூரி, அனாதை இல்லம், 180 பாடசாலைகள் ஆகியன இச்சங்கத்தால் நிர்வகிக்கப்பட்டன.

1961ல் அரசாங்கம் பள்ளிக்கூடங்களைக் கையேற்ற பின் சைவ வித்தியா விருத்திச் சங்கம் இலங்கையிலேயே அதிக பிள்ளைகளைக் கொண்ட அனாதை இல்லத்தை மட்டும் நடத்திவந்தது. 1970ம் ஆண்டு திரு. இராசரத்தினத்தின் மறைவுக்குப் பின் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அவர் இப்பதவியை 1987ம் ஆண்டு வரை தொடர்ந்து வகித்துவந்தார்.

ஐயா அவர்களது தலைமைத்துவத்தின் கீழ் பல இன்னல்களிடையிலும் அவரது ஆர்வம் காரணமாகப் பல முன்னேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இல்லத்துச் சிறுவர்களுடன் அன்பாகவும், ஆதரவாகவும் பழகி வந்த ஐயா அவர்கள் இல்லத்தில் கொண்டாடப்படும் சமய விழாக்களில் தவறாது பங்குபற்றிச் சிறுவர்களை மகிழ்விப்பதில் தானும் மகிழ்ச்சி அடைந்தார்.

கனகநாயகம் ஐயாவின் மறைவு தமிழ் மக்களிடையேயும், சைவ மக்களிடையேயும் ஒரு நிரப்பமுடியாத இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது. அவருடைய மறைவு சைவ வித்தியா விருத்திச் சங்கத்திற்கும் பேரிழப்பாகும். அவரு[illegible] விருத்திச் சங்கத்தில் எப்பொழுதும் நிலைத்திருக்கும்.

## சிரித்துக்கொண்டே

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அப்பொழுது.

ஆனந்த மயமான கனகநாயக வாழ்க்கை நாடகக் காட்சியில்இன்னொன்று கொழும்பு மாநகர் ஆனந்தாக்கல்லூரிஆசிரியராகஅமைந்தமை. நற்றமிழ்க்கல்விக் கொற்றவை ஆசான் ஆனார் அவர். பல்கலைப்பட்டம் அவர் இஷ்டப்படிஎய்தியது. சட்டக்கலைதான் உயர் மட்டக்கலையெனப்பட்டது இளம் பட்டதாரி இவருக். கு சட்டம் வாழ்க்கைக்கு நிறுதிட்டமானதென்று உணர்ந்தார். இந்த வளர்மதி நுண்மான் நுழைபுல் நுணுக்கத்தை உள்ளக்களிப்புடன் உய்த்துணர்ந்த வகையிலே சட்டம் இவரின் ஆற்றல் மிக்க நாளிலே காற்றில் ஏறிய பட்டம் போல உயர்ந்தது. நீதிமன்றம் ஒழுங்கு நெறிக்கமைய அமைதி நிலையமாயிருந்தும் கனகநாயகச் சட்ட வியாக்கியானம் வியப்பை விளைவிக்கும் விகடமாய் விளங்கவே மன்றம் மலர்ச்சியுறும்.

### தர்க்கத்தில் இவர் நாயகம்

தர்க்கத்தின் திறமைசால் வர்க்கத்தினரில் இவர் நாயகமாய் நின்றார். காரணம் வழக்காட வந்தோர், வாதாடி நின்றோர், நீராசனத்தமர்ந்தோர் யாவரும் உள்ளம் பூரிக்க நகைச்சுவையிலே மனம் மகிழ்ச்சியுற்றிருப்பர். வல்லடி வழக்குப் பேச வந்தவருக்கெல்லாம் சொல்லடி போட்ட வண்ணம் கலகலப்பாய் இருக்கும் கனககர்ச்சிதம்.

ஆடகமன்றில் ஆடும் அந்த அதிநாயகன் போல நீதிமன்றிலே கனகநாயகம் சட்ட நாடகம் நடிப்பது அடுக்கலையாயிருந்தது.

சட்டமேதையான மூத்த சட்டத்தரணியாய் மேல்மட்டத்திலே தமக்கென ஒரு இடம் பெற்ற நியாயவாதிகள் சிங்கம், ஏ. வி. குலசிங்கம் அவர்கள் இந்த நகைச்சுவைச் சட்டநிபுணனின் நிகழ்ச்சிகளை மெச்சியபடி அனுபவித்தனர்.

கொழும்பு மாநகரச் சட்டநிபுணர்கள் யாழ். நீதிமன்றம் வரும் பொழுதெல்லாம் கனகநாயக நகைச்சுவை விருந்தை மாற்றியவண்ணம் மனமகிழ்வர்.

இனிவேறொரு துறைக்குச் செல்லலாம்; கனிவான உள்ளத்துக்கு நன்கு பொருந்திய கலை கலாசாரம் கவிநாயகம் எனவே கலாசாலைகள் நுண்கலைப்பீடங்கள் எங்கள் நண்பனுக்குப் பரந்த அரங்கை அமைத்தன.

ஒருநாற்றைம்பதுக்கும் மேலான சைவப் பாடசாலைகளை நிறுவிய தர்மவீரன் சட்டத்தரணி, இராசரத்தினம் அவர்களின் நிரந்தர மந்திராலோசகர் ஆனார் இவர். பின் வித்தியா விருத்திச்சங்கத்தின் தலைவரானார்.

திருநெல்வேலி அனாதை பாடசாலை முகாமை அமைந்தது ஆதாரமற்றவர்களுக்கு அன்னமளிக்க ஆவன செய்த வள்ளல் ஆனார்.

பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபைத்தலைவரானார். வள்ளல் இராமநாதன் அவர்களின் நன்கொடையான பரந்தன் கழனிப்பெரும்பரப்பையும் அங்கு சிறுவர் பாடசாலையையும் நிருவகிப்பதிலே எஜமான் பொன் இராமநாதனின் திறமை வகித்தனர்.

யாழ். பல்கலைக்கழக ஆலோசகர் அவையின் அங்கத்துவம் தானாக வந்தடைந்தது. இந்துக்கல்லூரி இயக்குநர் சபையின் தலைமையும் தாங்கினார்.

## அகிம்சை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மர் திரு. ராஜீவ் காந்தி கல்வி பரிமாற்றுத் திட்டத்தின் கீழ் அமெரிக்கா செல்லும் மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்கள் இந்திய கலாசார மரபுச் செல்வத்தை புரிந்துகொண்டு மற்றவர்களுக்கும் எடுத்து விளக்க வேண்டியது அவர்களது பொறுப்பாகும் என்றும் திரு. காந்தி அம்மாணவர்களிடம் தெரிவித்தார்.

---

## அறிவுசால்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சட்டத்தரணியாகத் திகழ்ந்தார்.

கடந்த அரை நூற்றாண்டுக்கு மேலாக யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மல்லாகம், சாவகச்சேரி முதலிய மாவட்ட நீதிமன்றங்களில் பலதரப்பட்ட குடியியல் வழக்குகளில் சிரேஷ்ட சட்டத்தரணியாகத் தோன்றித் தனது வாதத் திறமையை வெளிப்படுத்தியுள்ளார். நகைச்சுவை இவருக்கோர் கைவந்த கலை. நீதிமன்றங்களில் வழக்குகளில் தோற்றும்போதும் நகைச்சுவை ததும்ப வழக்குகளை நடத்துவார். இளம் வழக்கறிஞர்களுக்கு ஆதரவளித்து அவர்களின் வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் திகழ்ந்தார். இவருடைய உதவியாளர்களாகச் சட்டத் தொழிலை ஆரம்பித்த பலர் இன்று சிரேஷ்ட சட்டத்தரணிகளாகவும், நீதிபதிகளாகவும் இருக்கிறார்கள், இருந்துள்ளார்கள். திரு. கனகநாயகம் சக சட்டத்தரணிகளாலும், நீதிபதிகளாலும், பொதுமக்களாலும் பெரிதும் மதிக்கப்பட்டார்.

இவருக்கு இரு ஆண்களும் ஒரு பெண்ணும் இருக்கிறார்கள். இவரின் மூத்த மகன் திரு. கனக-ஈஸ்வரன் ஜனாதிபதி சட்டத்தரணியாகக் கொழும்பில் தொழில்புரிகின்றார். இன்னொரு மகன் திரு. மகேஸ்வரன் பொறியியலாளராகப் பணிபுரிகின்றார்.

திரு. கனகநாயகம் இன்று நம் மத்தியில் இல்லாவிட்டாலும் அன்னாரின் பெயரும் புகழும் என்றும் இவ்வுலகில் நிலைத்துநிற்கும். அமரர் கனகநாயகத்தின் மறைவு அவருடைய குடும்பத்தினருக்குமட்டுமன்றித் தமிழ்ச் சமூகத்திற்கும் குறிப்பாகச் சட்டத்துறைக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

---

## நல்லை ஆதீன

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

எந்நேரமும் காட்சியளிப்பார் (நீதிமன்றம் தவிர) இறைபக்தி அன்பு பரோபகார சிந்தனை ஆகிய உயர் பண்புகளைக் கடைப்பிடித்தொழுகிய சைவப் பெரியார்.

இவர் போன்றோர் உலகில் ஆயிரத்தில் ஒருவரே.

சைவத்துக்கும் தமிழுக்கும் ஆற்றிய அருந்தொண்டுகள் ஒவ்வொன்றையும் எடுத்துரைக்கப்புகின் மிகவிரியும்.

இறுதி நாட்களில் அவர் ஆஸ்திரேலியாவிலிருந்து நல்லை ஆதீனத்தை மறவாது அன்பளிப்புக்காசோலை அனுப்பி இருந்ததை நாமும் ஒருபோதும் மறப்பதற்கில்லை.

இப்பூதவுடல் மறையுங்கால் அதுவும் ஐம்பூதங்களுடன் ஐக்கியமாகும். அரிதான மானிடப்பிறவியின் நோக்கு இறைவனடி சேர்வதே. அவ்வகையில் இப்பெரியாரின் ஜீவாத்மாவும் பரம்பொருளின் பாதாரவிந்தங்களில் பேரானந்த சாந்தி நிலை துய்க்க வேண்டுமென நாம் எல்லோரும் உளமாரப் பிரார்த்திப்போமாக. என்று வேண்டும் இன்ப அன்பு.

- ஸ்ரீலஸ்ரீசோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

(யாழ்ப்பாணம்)

நற்சமூக நிலையத்தால் நடத்தப்பட்ட சமூக தலைமைத்துவ பயிற்சி நெறியில் கலந்து கொண்டவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் மேற்படிநிலையத்தில்இம்மாதம் 24-ம்திகதி நடைபெறவுள்ளது.

நிலைய இயக்குனர் கலாநிதி எஸ். ஜே. இம்மானுவல் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் அகதிகளுக்கான ஐக்கியநாடுகளின் உயஸ்தானிகர் திரு. சொலொன் அபேபி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

---

## வயல்களில் குழாய்க் கிணறு

(அராலி)

அராலி, வட்டுக்கோட்டைப் பகுதிகளிலுள்ள நெல் வயல்களில் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டுவருகின்றன.

இந்த நெல்வயல்களில் மிளகாய், கத்தரி, வெங்காயம், புகையிலை முதலான பயிர்களைப் பயிரிடுவதற்காகவே தற்போது குழாய்க் கிணறுகள் பெருமளவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

தோட்டங்களுக்கு நீர்ப் பாய்ச்சுவதற்குக் கிணற்று வசதி இல்லாதிருந்தமையாலேயே இவை ஆண்டுக்கு ஒரு முறை நெற் பயிரிடும் வயல்களாகமட்டும் இருந்துவந்தன. இனிமேல் இந்தநெல் வயல்கள் காய்கறி உற்பத்தி செய்யப்படும் தோட்டமாகவும் இருக்கும் எனச் சொல்லப்படுகிறது.

---

## அரச அதிபர்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

படி மகளிர் பாடசாலையில் இடம்பெற்ற யாழ். மாநகர சபை சனசமூக நிலையங்களின் சம்மேளனக் கூட்டத்தில் நான் பங்குபற்றியபோது, சனசமூக நிலையத்தினர் 1987ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சில வேலைத் திட்டங்களுக்குக் கொடுப்பனவு செய்யப்படவில்லை என முறையிட்டனர். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் எனது உரையின்போது கீழ்க் கண்டவாறுதான் தெரிவித்தேன்.''

''அரசாங்கம் 1987ம் 1988ம் ஆண்டுகளுக்கான உள்ளூராட்சி ஆணையாளரின் நன்கொடைப்பணத்தை இம் மாவட்டத்திற்குத்தர மறுத்தபடியால் அக்கொடுப்பனவுகள் செய்யப்படவில்லை. இதன்படி ரூபா 40 இலட்சம் எமது மாவட்டம் இழந்துள்ளது. 1989ம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு நான் முனைகிறேன். பெரும்பாலும் இப்பண ஒதுக்கீடு கிடைக்குமென எதிர்பார்க்கிறேன். இப்பணம் கிடைத்ததும் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.''

---

## இலங்கை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தமது உரையில் தெரிவித்ததாவது; ''கடந்த 10 வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட பல்வேறு பிரச்னைகளுக்கும் மத்தியில் நாம் 'ஓணம்' பண்டிகையை கொண்டாடி வருகிறோம். மலையாளிகளுக்கே உரித்தான இப்பண்டிகை சுபீட்சம், ஐக்கியம், புரிந்துணர்வுகளை நம் மத்தியில் வளர்க்க உதவும். நாட்டில் பரந்துபட்டு சிதறிக்கிடக்கும் மலையாளிகளை இந்த ஓணம் பண்டிகை ஒன்று சேர்க்கிறது.''

எதிர் வரும் ஆகஸ்ட் மாதம் வரும் 'ஓணம் பண்டிகையை கிளிநொச்சியிலும், கொழும்பிலும் கொண்டாடுவதென்றும், மலையாளவம்சாவளி மூத்தகலைஞர்களை பொன்னாடைபோர்த்திக் கௌரவிப்பதென்றும், 'ஓணம் விழாமலர்' வெளியிடுவதெனவும் மேற்படி கூட்டத்தில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

திருவாளர்கள் ஈ.கே.பாரன், நரசிம்மன், சுப்பிரமணியன், கிருஷ்ணன் உட்படப் பலர் பேசினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அதிபரின் அனுமதியின்றி பாடசாலை வளவுக்குள் செல்லக்கூடாது"

## பிரதிக் கல்விப்பணிப்பாளர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

''எக்காரணம் கொண்டும் பாடசாலை வளவிற்குள் அதிபரின் அனுமதியின்றி உட்செல்லக்கூடாது. வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அதிபரின்காரியாலயத்துக்கு அப்பால் கல்வித்திணைக்கள உத்தியோகத்தர் தவிர எவரும் செல்லல் ஆகாது''.

இவ்வாறு யாழ்ப்பாணம் பிரதிக்கல்விப்பணிப்பாளர் பகிரங்கவேண்டுகோள் விடுத்துள்ளார். யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் என்ற ரீதியில் செல்வி பெரியதம்பி பொதுமக்களுக்கும், அதிபர்களுக்கும், ஆசிரியர், மாணவர்களுக்கும், ஆயுதம் தாங்கியோர்களுக்கும், அரசியல்வாதிகள், படையினர் ஆகியோருக்கும் விடுத்துள்ள இப் பகிரங்க வேண்டுகோளில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''பாடசாலை வளவினுள்ளும் பாடசாலையை அண்மித்த பகுதியிலும் பாடசாலை நேரத்திலும் ஆயுதநடவடிக்கைகளில் ஈடுபடுதல்தவிர்க்கப்படவேண்டும். பாடசாலைவளவினுள் முகாமிட்டுள்ள படையினர் அவற்றைவிட்டு அப்பால் முகாமிட்டு இருத்தலே சிறந்ததாகும். மாணவர்கள் படையினரால் கைது செய்யப்படும் பட்சத்தில் பாடசாலை அதிபருக்கு உடனடியாக தகவல் எழுத்துமூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

''இவ்வேண்டுகோளை மனிதாபிமான முறையில் ஆராய்ந்து,சம்பந்தப்பட்டோர் அதாவது ஆயுதம் தாங்கியோர் எழுத்து மூலமாக பாடசாலைக்கு வரும்போதும், பாடசாலையில் இருக்கும்போதும், பாடசாலையை விட்டுச்செல்லும் போதும் மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் பாதுகாப்பிற்கு உத்தரவாதமளிக்க முடியுமென்று பகிரங்க அறிவித்தல் விடும்படி தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

''பத்திரிகை மூலமாக மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் பாதுகாப்புக்கு அதிபர்கள். அதிகாரிகள் உத்தரவாதமளிக்க வேண்டுமென்று மாணவர்கள் கேட்டுள்ளார்கள், ஆனல், மாணவர்களும், ஆசிரியர்களும் 'ஆயுதம் தாங்கியவர்'களின் நடவடிக்கையினுலேயே பாதிக்கப்படுகின்றனர். நிலைமை இவ்வாறிருக்க அதிபர்களையும் அதிகாரிகளையும் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்குமாறு மாணவர்கள் கேட்பது நியாயமற்றது. நாட்டில் அராஜகம் நிலவுகிறது. சட்டத்தைமீறுவதே பண்பாடாகக் கருதப்படுகிறது. ஆகவே மேற்படிபகிரங்க வேண்டுகோளை விடுக்கிறேன்'' என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ். பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூரண ஆதரவைத் தெரிவித்திருக்கிறது. பாடசாலை மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக இன்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சகல விரிவுரைகளையும் பகிஷ்கரிப்பர்'' என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. அறிக்கை மேலும் கூறுவதாவது:

''மாணவர்களின் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகட்காக பாடசாலை தோறும் மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் ஆகியோரைக் கொண்ட இணைப்புக்குழுக்கள் உருவாக்கப்பட்டு, இவ்விணைப்புக் குழுக்கள் மாணவர்களின் பாதுகாப்பை உத்தரவாதப் படுத்தும் வகையில் செயற்பட வேண்டும். இம் முயற்சியில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏனைய பல்கலைக்கழக சங்கங்களுடன் இணைந்து செயற்பட முடிவு செய்துள்ளது. இதற்கு சகல பாடசாலைகளதும் அதிபர்கள், ஆசிரியர்கள்,மாணவர்கள்,பழைய மாணவர்கள், பெற்றோர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோரின் ஒத்துழைப்பு அவசியமானது.''

### வவுனியா பகுதியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட நால்வரின் சடலங்களும் வவுனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### விபத்தில் பலி

இதேவேளை வவுனியா, ஓமந்தை – யாழ் வீதியில்நடைபெற்ற விபத்தொன்றில் வான் கிளினர் கந்தையா (வயது 22) என்ற இளைஞர் பலியானர். வான் சாரதியும், மற்றுமொருவரும் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.


## எமது புதிய வெளியீடுகள்

1. S. V. சேகர் - ரேகா
   **தாயா தாரமா?**
2. ஜெய்சங்கர் - திலீப் - சசிகலா
   **வேங்கையன்** (ஒரிஜினல்)
3. கமல் - ஸ்ரீப்ரியா - ஸ்ரீகாந்த்
   **மரியா மை டார்லிங்** (ஒரிஜினல்)
4. சிவாஜி - K. R. விஜயா - பத்மினி
   **பாலாடை** (ஒரிஜினல்)
5. **தேனருவி** - ஒலி ஒளி
   (புதிய பாடல்கள்)

**குணம் வீடியோ சென்ரர்**

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.


### வர்த்தகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்விரு வர்த்தகர்களும் தமது வியாபார நிலையங்களில் இருந்து அழைத்துச்செல்லப்பட்டே சுட்டுக்கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நெல்லியடி - யாழ்ப்பாணம் வீதியில் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இவர்களது சடலங்களை உறவினர்கள் அடையாளம்காட்டி எடுத்துச் சென்றனர்.

(நெல்லி நிரு)

### கொழும்பில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கிறது.

ஹர்த்தால் காலத்தில் ஏற்படக்கூடிய எந்த ஒரு நிலையையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் விதமாகவே அரசாங்கம் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது.

பாதுகாப்புப் படையினரது, பொலிசாரினதும் சகல லீவுகளும் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

இதேவேளையில் பாதுகாப்புப் படையினரும், பொலிஸாரும் தென்பகுதித் தீவிரவாதிகளைத் தேடித் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்திருக்கின்றனர்.

பாதுகாப்புப் படையினரது கடந்த சனிக்கிழமை கட்டுகஸ்தொட்டையில் கூட்டாகத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது பொலிஸ் சீருடைகள், குண்டாந்தடிகள் மற்றும் பெருந்தொகையான வாள்கள் ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளார்கள்.

நுவரெலியா மாவட்டத்தில் அதேதினம் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு தேடுதல் நடவடிக்கையின் போது ரிவோல்வர்கள்,ஷொட்கன், பொறித்துப்பாக்கி ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

இதே நேரத்தில் இன்று 14ம் திகதியுடன் இந்திய வம்சாவழித் தமிழர்கள் அனைவரும் கொழும்பு நகரைவிட்டு வெளியேறவேண்டும் என்று எச்சரிக்கைச் சுவரொட்டிகள் கொழும்பில் ஒட்டப்பட்டுள்ளன.

இந்த எச்சரிக்கை அறிவித்தலைத் தொடர்ந்து கொழும்பிலுள்ள இந்தியத் தமிழர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயரத் தொடங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை கொழும்பிலுள்ள இந்திய வம்சாவளி மக்கள் அனைவரையும் பாதுகாப்புக் கருதி கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் தொடர்புகொள்ளுமாறு [illegible] ஒட்டப்பட்டுள்ளது.

## வடக்கு - கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முறை, கலவரச் சூழல்களை அடக்கமுடியாத சிறிலங்கா இராணுவமா வடக்கிற்கு வந்து அமைதியை ஏற்படுத்தப்போகிறது? முதலில் அவர்கள் தென்பகுதியில் அமைதியை ஏற்படுத்தட்டும்.

''இலங்கை ஜனதிபதி வடககு- கிழக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்குப் முயலாமல் மாருக குழப்பத்தை மேலும் வளர்க்கவே முற்பட்டுள்ளார்.

''சட்டம்,ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாகாண அரசின் முதல்வர் என்ற வகையில் சகல ஒத்துழைப்புககளைக்களையும் வழங்க நான் தயாராக இருக்கிறேன்.

''வடக்கு-கிழக்கில் அரச ஊழியர்களும் யாருக்கும் பயந்து செயல்படவேண்டிய அவசியமில்லை. பாதிக்கப்பட்டவர்களின் வீடுகளைக் கட்டவும், பிறவற்றுக்குமாக மாகாண அரசு ஒவ்வோர் அரச அதிபர்களுக்கும் பணத்தை ஒதுக்கிவிட்டது. இந்த நிலையில் அரசாங்க ஊழியர்கள் தமதுகடமைகளை தாமே உணர்ந்து செயல்பட வேண்டியது அவசியமாகிறது. சமூகசேவை நிறுவனங்களும், தமிழ் மக்களை நேசிக்கும் அரசியல் கட்சிகளும் இவ்விடயத்தில் பொறுப்புடன் செயலாற்றவேண்டும்.

''நான் புலிகளைக் கேட்பது என்னவென்ருல், நீங்கள் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை மையப்படுத்தி சிந்திக்கவேண்டாம். அதனை விடுத்துத் தமிழ்பேசும் மக்களை மையமாகச் சிந்திக்கும்படியும் செயல்படும்படியும் சகோதர உணர்வுடன் வேண்டுகிறேன். தனக்கு மூக்குப் போனலும் பரவாயில்லை எதிரிக்குச் சகுனப் பிழை ஏற்படவேண்டும் என நினைத்துச் செயல்படவேண்டாம். தமிழ்மக்கள் எல்லாவற்றையும் அவதானித்தே வருகிருர்கள்.

### வேலைக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

''ஏழை மக்களின் உணவு முத்திரைகள், உபகாரச்சம்பளங்கள், உணவு விநியோகம், பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைப்புப்பணிகள் போன்றன அரச அலுவலர்களின் அசமந்தப்போக்கால் தடைப்படுவது யாவருமறிந்ததே,

''அரசஊழியர்கள்வேலைக்கு வராதுவிடின் அவர்கள் தமக்குரிய வேதனத்தைப் பெற எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அனுமதி கிடைக்காது. ஸ்ரீலங்கா அரசின் செல்லப்பிள்ளைகளாக வேலைசெய்யாது விடினும், சம்பளம்வருமென்ற நினைப்பை சகலரும் மறந்துவிடவேண்டும். பொதுமக்களின் நலனில் அக்கறை கொண்ட சகலமக்களும், கச்சேரி, மற்றும் அரச அலுவலகங்கள் பூட்டப்பட்டிருப்பதை ஏற்கமாட்டார்கள்

''அனுமதி பெருதுவேலைக்கு வராது நிற்றல் தண்டனைக்குரிய குற்றமாகும். வேலைக்கு வராமல் விடும் எவரையும் வேலைநீக்கம் செய்யும் அதிகாரம் ஸ்ரீலங்கா அரசுக்கு மட்டுமே உண்டு என்றதொரு அடிவருடல் மனப்பான்மை அடிமைப்புத்தி கொண்ட எமது சில அலுவலர்களுக்கு இருக்கலாம். ஆனல்,வேலைக்கு வராதவர்களைத் தகுந்த காரணத்தைப் பெருது கச்சேரிக்குள் நுழையவிடா தவாறு செய்து ஒரு ஒழுங்கான நிர்வாகத்தை - சீரான நிர்வாகத்தை நடாத்த மாகாண அரசுக்கு நடைமுறை அதிகாரங்கள் உண்டு. மேலும் ஸ்ரீலங்கா அரசுடன்கூட்டுச்சேரும்அரசஊழியர்கள் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற உதவமாட்டார்கள். அவர்கள் வேலைக்கு வராது விடுவதன் பிரதிபலன்களை உடனுக்குடன் அறியச் செய்வோம்.

''சகல அலுவலர்களும் தத்தமது வேலைத்தலத்துக்கு உடனடியாக வேலைக்கு வரும்படி தயவுடன் கேட்கப்படுகின்ருர்கள். மாகாண அரசின் இந்த வேண்டுகோளை சகல அலுவலர்களும் புரிந்து கொள்ளவேண்டும். இதுவே எமது இறுதி எச்சரிக்கை.

''இன்னும் ஓரிரு தினங்களில் சகல அரச அலுவலகங்களும் இயங்கும். அப்படி இயங்காமற் போனல் அதன் பின்விளைவுகளுக்கு சகல அரச ஊழியர்களும் ஒட்டுமொத்தமாகப் பொறுப்பேற்கவேண்டும்.

''புதியஊழியர்களைபோட்டு கச்சேரி, கூட்டுறவு அலுவலகங்கள் போன்ற சகல அலுவலகங்களையும் நடாத்தப்பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும் இளைப்பாறுதல், இராஜினமாச் செய்தல், மாற்றம் எடுத்துக் கொண்டு ஓடுதல், போன்ற எதுவும், மகாண அரசுக்கு விரோதமான செயற்பாடுகள் எனக்கருதப்பட்டு அவர்களுக்கு எதிராகக் கடுமையான மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் மிக மனவருத்தத்துடன் முன்கூட்டியே அறிவித்துக்கொள்கின்ருேம்.

''எந்த அரச அலுவலரும் வேலைசெய்யும் பிரதேசத்தை விட்டு ஏழு மைல் தூரத்திற்கு அப்பால் திணைக்களத் தலைவரின் அனுமதியின்றிச் செல்ல முடியாது. அப்படி எவராவது செல்லுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். ஏயாற்றி விட்டுச்செல்லும்எவரும்இடைநிறுத்தப்படுவர். அத்துடன் அத்தகைய அனுமதியற்ற பிரயாணத்தினுல் ஏற்படப்போம விளைவுகளுக்கு அவரே பொறுப்பாவார்.''

### பிரேரணை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இராச்சியமொன்றைப்பிரகடனப்படுத்துவது பற்றி பிரேரணை நிறைவேறியுள்ளதாக சில பத்திரிகைகளில் வெளிவந்த செய்தி முற்றிலும் தவறனது. அவ்வாறு எவ்வித பிரேரணையும் வடக்கு-கிழக்கு மாகாண சபையில் இதுவரை நிறைவேறவில்லை'' என்று மாகாண சபையின் தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பாடசாலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு வடக்கு - கிழக்கு மாகாண அரசின் கல்விஅமைச்சரின் செயலாளர் பணிப்புரை வழங்கியுள்ளார்.

இப்பணிப்புரையில் நேற்று முன் தினம் [திங்கட்கிழமை] முதல் பாடசாலைகளை நடத்தும்படி அவசரக் கடிதமூலம் கேட்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் செல்வி. பெரியதம்பி மேற்படி பணிப்புரைகளை சகல பாடசாலை அதிபர்களுக்கும் விடுத்துள்ளார். பாடசாலைகளை வழமை போன்று நடத்தும்படியும் அவர் சகல பாடசாலை அதிபர்களிடமும் கேட்டுக்கொண்டிருக்கிருர்.

### இந்திய தூதரக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவே தூதரக அதிகாரிகள் ஹோட்டலுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்தியர்களின் பாதுகாப்புக்குறித்து இந்தியத் தூதுவர். ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாஸா. அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன ஆகியோரை நேற்றுச்சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தியாவிற்கு எதிரான தனது போராட்டத்துக்கு ஆதரவாகவே ஜே. வி. பி. இன்றுமுதல் ஒரு வாரகால ஹர்த்தாலுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper atthe General Post Office Sr iLanka under number B/00[illegible]/81. Eelanadu P. O. Box No: 49. Telegram Eelanadu. Telephone; 22389. 24126.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org